Nallur Branch Library



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 5 வியாழக்கிழமை 20-11-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 334

# ஜெயின் கமிஷனின் அறிக்கையால் இந்திய அரசியலில் பெருங் குழப்பம்!

## குஜ்ரால் அரசு கவிழும் நிலை

புதுடில்லி, நவம்பர் 20

பெரும் பரபரப்புக்கு மத்தியில் இந்திய நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவிருக்கும் ஜெயின் கமிஷனின் (ஆணைக் குழுவின்) இடைக்கால அறிக்கையால் இந்திய அரசியலில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தர்குமார் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு கவிழும் சூழ்நிலை கூட உருவாகி வருவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றார்கள்.

1991 மே 21 ஆம் திகதி தமிழ்நாடு ஸ்ரீ பெரும்புதூரில் வைத்து தற்கொலைக் குண்டுதாரி ஒருவரின் தாக்குதலில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டது தெரிந்ததே. இந்தக் கொலையின் பின்னணியில் அரசியல் சதித்திட்டம் இருந்ததா என்பதை ஆராய்வதற்காக ஜெயின் ஆணைக் குழு நியமிக்கப்பட்டது.

அந்த ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை இன்று இந்திய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

ராஜீவ் காந்தியைக் கொல்வதற்குக் காரணமான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அந்தக் காலகட்டத்துக்கு சற்று முன்னர் தமிழகத்தில் ஆட்சியிலிருந்த தி. மு. க.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கி 3 மாணவர் பலி!

### வாழைச்சேனையில் பரிதாபம்

மட்டக்களப்பு, நவ. 20

வாழைச்சேனை செம்மானோடை விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டு இருந்த மூன்று மாணவர்கள் மின்னல் தாக்கி மரணமான பரிதாபகரமான சம்பவம் நேற்று மாலை 5-45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த மைதானத்தில் சுமார் 25 மாணவர்கள் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தனர் என்றும் — திடீரென இடி மின்னல் தாக்கியதில் மூன்று மாணவர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று இலேசான மழை பெய்தது.

(உ-21-3)

## மாங்குளத்தில் குண்டு வீச்சு!

கொழும்பு, நவ. 20

மாங்குளத்துக்கு வடமேற்கே தேக்குமரக் காட்டுப் பகுதியில் அமைந்திருந்த புலிகளின் முக்கிய முகாம் ஒன்றை விமானப் படையின் கிபிர் விமானங்கள் நேற்றுக் காலை 10-30 மணிக்கு குண்டு வீசித் தாக்கி அழித்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று அறிவித்தன.

விமானப் படையின் வேவு பார்க்கும் தன்னியக்க விமானம் ஒன்று இந்த முகாமைக் கண்டு பிடித்ததை அடுத்து, அதன் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கொக்குவில் - மானிப்பாய் நேற்று சுற்றிவளைப்பு

ஆனைக்கோட்டை, உயரப்புலம், சாவற்கட்டு, கொக்குவில், இணுவில், கோண்டாவில், சுதுமலை, தாவடி, மானிப்பாய் உடுவில் ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை 5.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது. பலத்த தேடுதலும் இடம்பெற்றது.

அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் தமது கடமைக்குச் செல்ல அனுமதிக்கப்படாததால் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். வீடுகளுக்குள் இருக்கும்படி ஒலி பெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தலும் விடுக்கப்பட்டது.

மருதனார்மடம் சந்தைக்கு மக்கள் அனுமதிக்கப்படாததால் சுன்னாகம் சந்தையில் சனநெருக்கடி காணப்பட்டது.

(உ-152-100)

## கண்ணிவெடிகள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 20

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று கண்ணிவெடிகள், கிளைமோர் வெடிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

நவாலியில் ஒரு கிளைமோர் கண்ணி கண்டுபிடிக்கப்பட்டது. பண்ணை கரையோரப் பாதைக்கு அருகே இரண்டு கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டன.

மீசாலையில் இரு கண்ணிவெடிகளும், வடமராட்சிப் பகுதியில் நேரம் குறித்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## சினிமா ஸ்ருடியோவில் பெரும் குண்டுவெடிப்பு!

புதுடில்லி, நவ. 20

ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் சினிமா ஸ்ருடியோ ஒன்றின் வாசலில் நேற்று அதிசக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் 23 பேர் உயிரிழந்தனர்; இருபது பேர் வரையில் படுகாயமடைந்தனர்.

பிரபல நடிகரும் ஆந்திர அரசியல்வாதியுமான மோகன்பாபு மற்றும் திரைப்படத் தயாரிப்பாளரும், எம். எல். ஏயும், முன்னாள் அமைச்சரும், முன்னாள் இடதுசாரித்

(10ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோரின் உறவினரை சந்தித்துப்பேச ஜனாதிபதி இணக்கம்

கொழும்பு, நவ. 20

குடாநாட்டில் கைதாகித் தகவல் தெரியாதுள்ளவர்கள் தொடர்பாக அவர்களின் பாதுகாவலர்களுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த ஈ.பி.டி.பி. தூதுக்குழுவிடம் இது தொடர்பாக இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் இந்தப் பேச்சுக்கான திகதியை ஜனாதிபதி அறிவிப்பார் என்று ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழு ஜனாதிபதியைச் சந்தித்தது.

கடந்த தடவை டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் சென்றிருந்த சமயம் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசு - புலிகள் பேச வேண்டும்

### ஜோசப் பரராஜசிங்கம் எம். பி. கோரிக்கை

கொழும்பு, நவ. 20

'வெல்ல முடியாத இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் அதற்குப் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்; அதன் பின்னர் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சில் ஈடுபடலாம்.'

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு — செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என இலங்கையின் கடும்போக்குள்ள இராணுவத் தளபதிகள் தெரிவித்துள்ளனர் என்று 'ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான ஒரு கட்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் எது குறித்துப் பேசுவது?

## அரசு-ஐ. தே. க. முதலில் ஒன்றுகூடி தீர்மானம் செய்ய வேண்டும்

### நாடாளுமன்றில் சித்தார்த்தன்

கொழும்பு, நவ. 20

விடுதலைப் புலிகளுடன் எது குறித்துப் பேசுவது என்பது பற்றி ஆளும் தரப்பும் ஐ. தே. கட்சியும் முதலில் பேசித்தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

— இவ்வாறு கோரினார் புளொட் அமைப்பின் வன்னி மாவட்ட எம். பியான த. சித்தார்த்தன்.

நேற்று வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு கூறியதாவது: மலிவு விலையில பாணும் பருப்பும் தரும்படி மக்கள் அரசாங்கத்தைக் கேட்டனர்.

ஆனால் அரசு வருமான வரிச் சலுகை போன்றவற்றை அறிவித்ததன் மூலம் மக்களுக்கு மலிவாக பவுணையும் இரத்தினக் கல்லையும் வழங்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## குமாரவேலு சண்முகநாதன்

[முன்னாள் உரிமையாளர், சரண்யா ரெக்ஸ்]

புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் சீனியர் லேன், கலட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமான குமாரவேலு சண்முகநாதன் 19 11-1997 புதன்கிழமை காலமானார்.

இவர் தங்கராசம்மாவின் அன்புக் கணவரும், சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற ஸ்ரீதரன், தனபாலசிங்கம் (நியூஸிலாந்து), யோகேஸ்வரி (ஆசிரியை - புங்குடுதீவு கணேசா), சந்திரமோகன் (கொழும்பு), அரவிந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கு. அருளையா (ஓய்வுபெற்ற சிறாப்பர்), டாக்டர் சுமணதேவி (நியூசிலாந்து), தில்லைநாதன் (ஆசிரியர்) அன்பரசி, ஞானலதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஸ்ணபிள்ளை (கனடா), சபாரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தர்மலிங்கம், நாகராசா, செல்லம்மா (கனடா), சிவசாமி (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), கோபாலபிள்ளை (உரிமையாளர், உதயம்ஸ் - கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், அருட்செல்வி (ஆசிரியை, பேட்டி ஆசிரியர்), மைதிலி (ஆசிரிய கல்லூரி), உதயசங்கர் (தொழில் நுட்பவியலாளர்), பவானி, செந்தூரன், இளங்குமரன், கோபிநாத், சர்மிளா, கோகுலன், தாரணி, அஸ்வினி, சிந்துஜா, கௌசிகா ஆகியோரின் அன்புப் பேரனும், நிலோஜனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20-11-1997) வியாழக்கிழமை 12 மணியளவில் சீனியர் லேனிலுள்ள இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
கு. அருளையா
(மருமகன்)

71/9, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.
[51281]

## சின்னத்தம்பி இராஜரெட்ணம்

மானிப்பாயைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் சின்னத்தம்பி இராஜரெட்ணம் 14-11-97 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னம்மா ஆகியோரின் புதல்வனும், இளைப்பாறிய ஆசிரியை சரஸ்வதி அம்மாளின் அன்புக் கணவரும், அனுசலா, விக்னானந்தா, சுதானந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், மணிவண்ணன், சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும், மாயவன், மாதவன், பிரசாந்தி ஆகியோரின் அன்புப் பேரனும், விஸ்வலிங்கம், கனகம்மா (இளைப்பாறிய ஆசிரியை), இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மா. அன்னலக்சுமி (செல்வநாயகம்), சுந்தரலிங்கம், தனவதி அம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-11-97) காலை 10 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு, அரசடி லேன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. விக்னானந்தா
(மகன்)

அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு.
(51293)

## சின்னத்தம்பி சிவகுரு

சுன்னாகம் 'கிருஷ்ணா பில்டிங்', ஸ்ரீ கிருஷ்ணா றேடியோ வேக்ஸ் உரிமையாளர் சின்னத்தம்பி சிவகுரு 16-11-97 அன்று கற்பிட்டியில் சிவபதமடைந்தார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும், கிருஷ்ணமலர், கிருஷ்ணமேனன், கிருஷ்ணமோகன், கிருஷ்ணானந்தன், கிருஷ்ணதாசன், கிருஷ்ணசாந்தி, காலஞ்சென்ற கிருஷ்ணபவான் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கற்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
பொ. பேரின்பநாதன்
(சகோதரர்)

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(52291)

## பாலன் சின்னம்மா

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பாலன் சின்னம்மா 18-11-97 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலன் அவர்களின் அன்பு மனைவியும், யோகரத்தினம் (மதுபான விற்பனை நிலையம், மானிப்பாய்), அருமைத்துரை (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), செல்வம் (ஓமான்) செல்வராசா (நெதர்லாந்து), மகேஸ்வரி, சற்குணவதி, இராசமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அருச்சுணர், நல்லையா, பொன்னுத்துரை (நடத்துனர், இ. போ. ச. கொண்டாவில் டிப்போ), சந்திரா, புளொரன்ஸ், கிருஷ்தா, குமுதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-11-97 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
பா. யோகரத்தினம்
(மகன்)

கனகசபை வீதி,
மானிப்பாய்.
(51285)

## சிறுவர் பாடசாலை ஆரம்பம்

கொழும்புத்துறை எழிலூர் அன்னை வேளாங்கண்ணி பாலர்பாடசாலை கடந்த யுத்தகால அனர்த்தங்களின் பின் புனரமைக்கப்பட்டு அண்மையில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

எழிலூர் புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் பங்குத் தந்தை அருட்திரு சாள்ஸினால் இப்பாடசாலை அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1997 - 12 - 20 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. மிருக விஞ்ஞானம் / பயிராக்கவியல் / விவசாயப் பொருளியல் / விவசாய இரசாயனவியல் / விவசாய உயிரியல் / விவசாயப்பொறியியலில் தற்காலிக விரிவுரையாளர்/ தற்காலிக செய்முறைக் காட்டுநர்.
2. ஆற்றுகைக் கலையில் தற்காலிக விரிவுரையாளர் வாய்ப்பாட்டு (கர்நாடக சங்கீதம்)

சம்பள அளவுத் திட்டம்;

1. தற்காலிக விரிவுரையாளர்: ரூபா 8833.75 (நிலையானது) மாதமொன்றுக்கு
2. தற்காலிகச் செய்முறைக் காட்டுநர்: ரூபா 6980 83 (நிலையானது) மாதமொன்றுக்கு

விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழகக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20 செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20 பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 23 × 10ச.மீ அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட ரூபா 2.50 முத்திரையொட்டப்பட்ட கடித உறையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

— பதிவாளர்,

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.
1997-11-08 (சி/2098)

## ராகிங் கொலைக்கொடுமை; யாழ்ப்பாணத்து உணர்வலை

# சமுதாயத்தின் பொறுப்பு

''சுன்னைப் பவுண்'' என்ற புனை பெயரில் யாழ்ப்பாணத்திலிருந்து வண. பிதா ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்,

நான் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றவனும் அல்லன்; கற்கிறவனும் அல்லன். ஆனால் சென்ற வருடம் வரை ஏட்டுக் கல்வியினுள் கரைந்தவன். அதனால் ஏட்டுக் கல்வியின் முக்கியத்துவத்தையும், தனித்தன்மையையும் நன்குணர்ந்து மதிக்கிறவன்.

சபை நடுவே நீட்டோலை வாசிக்க முடியாதவனைப் பட்ட மரம் என்றார் ஔவை.

விலை கொடுத்து வாங்கவே முடியாத செல்வத்தினுள் எல்லாம் சிறந்த செல்வமாகக் கல்வியை எடுத்துரைத்தான் பாரதி. அதனால் தான் எமது சமூகத்தில் இன்று கல்வியும், கலைக்கூடமும், மாணவரும் உச்ச நிலையில் போற்றப்பட்டு கண்கள் எனக் காக்கப்படுகின்றனர்.

இதனாலேயே 27-10-97 அன்று உதயனில் வாசித்து, வரப்பிரகாஷின் இறந்த செய்தி கேட்டுக் கொதித்தன மனித மனங்கள். பின் 11 - 11 - 97 அன்று உதயனை வாசித்து ''யாழ்ப்பாணத்திலும் ராகிங் சூடு பிடிக்கிறது'' என்றறிந்து கொதித்தனர் யாழ். மக்கள்.

12 - 11 - 97 அன்று உதயன் மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் அதற்குக் கொடுத்த பதிலடி கேட்டு அவர்கள் பால் மக்கள் வெறுப்புற்றதும் நியாயமானதே.

இது கல்வியின் பால் சமூகத்தின் அதிருப்தி அல்ல. மாணவர் பால் அவர்களின் பொறாமையும் அல்ல. மாறாகப் பல்கலைக்கழக நிர்வாகமும், விரிவுரையாளர்களும் செயற்படத் தவறி மௌனம் சாதித்தமையினால் மக்கள் காட்டிய கரிசனை.

இது 'ஆடு நனைவது கண்டு ஓநாய் அழுத கதை' அல்ல. மாறாக பூமாலை குரங்கின் கையில் ஆகிவிடக் கூடாது என்ற மக்களின் ஆதங்கம்.

மாணவன் எடின்ரன் 18-11-97 அன்று ''பலத்தை அன்றி அறிவைக் காட்டுக'' என்ற தலைப்பில் படைத்ததனைப் படித்து வியந்தேன்.

''எமக்குத் தோல்வி எனக் கருதுவோர் தம் வெற்றி கண்டு களிப்புறட்டும். நன்மை பெறுவோர் நன்மை பெறட்டும். ஆனால் எவருக்கும் தீமை ஏற்படாத வண்ணம் பாதுகாப்போம்.'' என்ற அறை கூவலை நான் மெச்சுகிறேன்; பாராட்டுகிறேன்.

அதே உதயனில் ''அறிவு முதிர்ச்சி பெற்ற புத்தி ஜீவிகளாக'' நடக்குமாறு மாணவரை அறிவுறுத்தும் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் மாணவ ஆலோசகருமான வே. லோகநாதன் அவர்களையும் பாராட்டுகிறேன்.

மாணவரே! நீங்கள் சமூகத்தின் முத்துக்கள்; உன்னதமான சொத்துக்கள்; சமூகத்தின் கண் போன்றவர்கள்; உங்களை நாம் மதிக்கின்றோம். நாம் தான் சமூகத்தை நகர்த்தும் வாகனங்கள் என்று எண்ணி பெருமை கொள்வதை விட சமூகம் நகர்வதற்கு வழிகாட்டும் ஒளி விளக்குகள் என உணர்ந்துகொள்ளுங்கள்.

''கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

நானும் எனது கல்வி வாழ்க்கையில் 'ராகிங்' பெற்றவன்; கொடுத்தவன். ''ராகிங்'' என்ற பெயரை மாற்றுவதை விட அதைப் புனிதப்படுத்துங்கள்.

மக்களே; நீங்கள் சமூகத்தின் மாபெரும் சக்தி. ஆனால் எதை, எங்கே, எப்படிக் கையாள்வது என்பதை உணர்ந்து நடப்பதில்தான் உங்கள் முதிர்ச்சி தென்படும்.

மாணவர்கள்— இவர்கள் இளையவர்கள்; இளமைத் துடிப்பு மிக்கவர்கள். உணர்ச்சித் தளம்பலின் உச்சியில் உலா வருபவர்கள்.

சமூகத்தின் அழிவுகளை, கொடுமைகளை, அநீதிகளை, அக்கிரமங்களை, அரசியல் தந்திரங்களை, ஊழல்களைக் கண்டு, சினந்து, கண்சிவந்து நின்ற இளைஞர்களை ''தீவிரவாதிகளாக்கி' 'பயங்கரவாதிகளாக' ஆக்கியது யார்? — எமது சமூகம், எமது அரசியல்;

மாணவர்கள் பொறுப்புள்ள அறிவு முதிர்ச்சி பெற்ற புத்தி ஜீவிகளாக, சமூகத்தின் ஒளி விளக்குகளாக உருவாகுவதுதான் மக்களின் உண்மையான விருப்பம் என்றால் பொறுப்புணர்ச்சியோடு கூடிய முதிர்ச்சி பெற்ற சமூகமாக செயற்பட்டு மாணவரை. உங்கள் சின்னஞ் சிறுசுகளை உரிமையுடன் கண்டியுங்கள்; திருத்துங்கள்.

அவர்கள் மீது ஒரு தெய்வீக சமுதாயம் வளர்ந்தெழட்டும். ★

# மரண அறிவித்தல்

## அருட்திரு புறூனோ டானியல்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புனித ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்தவரும், கண்டி மறை மாவட்டத்திலும், ராஜகிரியாவிலும் பணியாற்றியவருமான அருட்திரு புறூனோ டானியல் அடிகள் அமெரிக்காவில் 19 - 11 - 1997 அன்று காலமானார்.

அவரின் அடக்கச் சடங்குகள் அமெரிக்காவில் நடைபெறவுள்ளன.

அவரின் வாழ்விற்காகவும் அவரது பணிக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறி நாளை வெள்ளிக்கிழமை (21-11-97) மாலை 5 மணிக்கு கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

அருட்திரு. அன்ரன் மத்தாயஸ்,
(பெறாமகன்)

(51292)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

ஈராக் நெருக்கடிக்கு

# ரஷ்யா தயாரித்த சமரசத் திட்டம்

மொஸ்கோ, நவ. 20

ஈராக் நெருக்கடியை இராணுவபலத்தைப் பயன்படுத்தாமல் தீர்ப்பதற்கான திட்டம் ஒன்றை ஈராக்குடன் இணைந்து தயாரித்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சினும் ஈராக் துணைப் பிரதமர் தாரிக் அஸீஸும் மொஸ்கோவில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்திய போது இந்த சமாதானத் திட்டம் குறித்து இணக்கம் ஏற்பட்டதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் பிரிமகோவ் தெரிவித்தார்.

வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஐ.நா. பாதுகாப்புச் சபை மேற்கொண்ட தீர்மானங்கள் அனைத்தையும் ஈராக் செயற்படுத்த வேண்டும் என்பதை இப்புதிய திட்டம் கடமை என ஏற்றுக் கொண்டுள்ளது.

இத்திட்டம் குறித்து பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகியனவற்றின் வெளிவிவகார அமைச்சர்களுடன் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் விவாதிக்கவுள்ளார். (ஐ)

## மேலும் போர் விமானங்கள் வளைகுடாப்பகுதிக்கு விரைவு

நியூயோர்க், நவ. 20

வளைகுடாப் பகுதிக்கு மேலும் பல போர் விமானங்களை அமெரிக்கா அனுப்பியுள்ளது.

"எப் - 117 ஏ" விமானங்களை வளைகுடாவுக்கு அனுப்புமாறு அதிபர் கிளின்ரனிடம் பென்ரகன் கேட்டுக் கொண்டதை அடுத்தே அந்த விமானங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

"தெளிவான நிலைமை எதுவும் இப்போது தென்படவில்லை. எனினும் படைத் தளபதிகளின் ஆலோசனைகளுக்கு இணங்க அதிபர் கிளின்ரன் மேலும் போர் விமானங்களை அனுப்ப முடிவு செய்துள்ளார்" என்று தேசிய பாதுகாப்புத் துறை ஆலோசகர் சாமுவேல் பேர்கர் தெரிவித்தார்.

இதேவேளை—அமெரிக்காவின் 'யூ - 14' வேவு விமானங்கள் மீண்டும் ஈராக் மீது பறத்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அவற்றின் மீது ஈராக் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. (ஐ)

## ஆங்கிலப் பெயர்ப்பலகை எதிர்ப்பு இயக்கம்

### பெங்களூரில் சூடு பிடிக்கிறது

பெங்களூர், நவ. 20

கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் ஆங்கிலப் பெயர்ப் பலகைகளுக்கு எதிரான இயக்கத்தின் நடவடிக்கைகள் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன.

ஆங்கிலத்தில் எழுதப்படும் வர்த்தக நிலையங்களின் பெயர்ப் பலகைகள் மற்றும் பொது அறிவிப்புப் பலகைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் பெங்களூரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

மாநில அரசால் நடத்தப்படும் "கன்னட வளர்ச்சி அதிகாரக் குழு" என்ற அமைப்பின் தலைவரான சந்திரசேகர பட்டேல் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது நகரில் இருந்த "கொக்கோகோலா" விளம்பரப் பலகை ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.

நகர வர்த்தக நிலையங்களின் பெயர்ப் பலகைகள் அனைத்தையும் கன்னட மொழியிலேயே எழுதப்பட வேண்டும் என்றும்—

இவ்வாறு பெயர்ப்பலகைகளை மாற்றி எழுதுவதற்கு எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டிருப்பதாகவும் கன்னட வளர்ச்சி அதிகாரக் குழு அறிவித்துள்ளது.

தமிழ் மற்றும் உருது மொழி பேசுவோர் பெரும் எண்ணிக்கையில் வசிக்கும் பெங்களூர் நகரில் இவ்வாறு செய்ய முற்படுவது அந்த நகரின் தனித் தன்மையைப் பாதித்து விடும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

வளைகுடா நிலைமை குறித்து

## நத்தனியாகு - ஹுசேய்ன் லண்டனில் சந்தித்துப் பேச்சு

லண்டன், நவ. 20

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகுவும், ஜோர்தான் மன்னர் ஹுசேய்னும் லண்டனுக்கு அருகே ஓரிடத்தில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

ஹமாஸ் இயக்க உயர்தலைவரை அம்மானில் வைத்து கொலை செய்ய இஸ்ரேலிய உளவுப் பிரிவினர் முயன்ற சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பிணக்கின் பின்னர் இவர்கள் சந்தித்துப் பேசுவது இதுவே முதல் முறையாகும்.

வளைகுடா நெருக்கடி போராக வெடித்தால் ஜோர்தான் எல்லைகளை இஸ்ரேல் மீறக்கூடாது என்று மன்னர் ஹுசேய்ன் நத்தனியாகுவிடம் கூறியதாக இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது.

1991 ஆம்ஆண்டுநடந்த வளைகுடா யுத்தத்தின்போது இஸ்ரேல் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. ஆனால் அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை ஏற்று அதற்குப் பதிலடி கொடுப்பதை இஸ்ரேல் தவிர்த்தது (ஐ)

# தென்னாபிரிக்கத் தூதரை பணயம் வைக்க முயற்சி

## தைவானில் முறியடிப்பு

தைபேய், நவ 20

தைவானின தலைநகர் தைபேயில் தென்னாபிரிக்கத் தூதர் அலெக்ஸாண்டரையும் அவரது குடும்பத்தினரையும் அவர்களது இல்லத்திலேயே பணயக் கைதிகளாக்க ஆயுதபாணி ஒருவர் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது.

துப்பாக்கியுடன் தூதரின் இல்லத்துக்குள் திடீரெனப் பிரவேசித்த நபர் தூதரையும் அவரது மகள் ஒருவரையும் சுட்டுக் காயப்படுத்தினார்; அவரது மனைவி உட்பட குடும்பத்தவர்கள் ஐந்து பேரையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்தார்.

அதனையடுத்து தைவான் அதிரடிப்படையினர் சுமார் 100 பேர் தூதரின் இல்லத்தைச் சூழ்ந்து முற்றுகையிட்டு அந்த ஆயுதபாணியை மடக்கிப் பிடித்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் பிரபல நடிகை ஒருவரின் மகளைக் கடத்திச் சென்று கொலை செய்து வீசிய சம்பவத்துடன் தொடர்புடைய நபரே இந்தப் பணய நாடகத்தையும் நடத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது. (ஐ)

## அல்பிறைற் புதுடில்லியில்

புதுடில்லி, நவ. 20

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மெடலின் அல்பிறைற் அம்மையார் புதுடில்லிக்கு விஜயம் செய்தார்.

இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணனையும், அரசியல் தலைவர்கள் பலரையும் நேற்று அவர் சந்தித்துப் பேசினார்.

உலக அரங்கில்

அக்ராவில் உள்ள "தாஜ் மஹால்" தொழிற்சாலை புகைகளினால் மாசடையும் விடயம் குறித்து சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் அல்பிறைற் சந்தித்துப் பேசினார். (ஐ)

## பணத்துக்கு இரத்தம் வழங்க தடை

புதுடில்லி, நவ. 20

பணத்துக்காக இரத்தம் வழங்குவதைத் தொழிலாகக் கொண்டவர்களிடம் இருந்து இரத்தம் சேகரிப்பது இந்தியாவில் தடைசெய்யப்படும்.

அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்தத் தடை அமுலுக்கு வரும் என்று மத்திய சுகாதார குடும்ப நலத்துறை இணை அமைச்சர் திருமதி ரேணுகா சௌத்ரி தெரிவித்துள்ளார்.

நோயாளிகளுக்கு இரத்தம் செலுத்தும் போது எத்தகைய ஆபத்துக்களும் நேராமல் பாதுகாத்துக் கொள்ள இது உதவி புரியும் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## ஜெயின் அறிக்கை இன்று சமர்ப்பிப்பு

புதுடில்லி, நவ. 20

ராஜீவ்காந்தி கொலை தொடர்பான ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை இன்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சபாநாயகர் பி. ஏ. சர்மா தெரிவித்தார்.

3 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையின் பிரதிகளை சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் வழங்க அரசு இணங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தின் குளிர் காலக் கூட்டத்தொடர் நேற்றுக் காலைக் ஆரம்பமானது. மறைந்த அன்னைதெரேஸா, மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் என். வீ. என். சோமு உட்பட பலருக்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானங்களை நிறைவேற்றிய பின் அவை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

எகிப்தில் நடந்த படுகொலைச் சம்பவம்:

## உல்லாசப் பயணிகளைக் கடத்துவதே திட்டம்!

### இஸ்லாமியக் குழு அறிக்கை

கெய்ரோ, நவ. 20

எகிப்தில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் 60 பேர் பலியாக நேர்ந்த சம்பவத்துக்கு "ஹமா அல் இஸ்லாமியா" என்ற தீவிரவாதக் குழு பொறுப்பேற்றுள்ளது

இது தொடர்பாக கடந்த செவ்வாயன்று அந்த இயக்கம் அறிக்கை ஒன்றை விடுத்தது. பெரும் எண்ணிக்கையில் பயணிகள் உயிர் இழக்க நேர்ந்தது குறித்து அதில் கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் சிறைவைக்கப்பட்டிருக்கும் தங்கள் இயக்கத்தின் தலைவர் ஷேய்க் ஓமார் அப்துல் ரஹ்மான் என்பவரை விடுவிக்குமாறு அமெரிக்காவைக் கோர வசதியாக உல்லாசப் பயணிகளைக் கடத்தி பணயக்கைதிகளாக்கவே தாம் திட்டமிட்டிருந்ததாகவும்—

ஆனால் இவ்விடயத்தில் எகிப்தியப் படையினர் அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்ததாலேயே உல்லாசப் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் பலியாக நேர்ந்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை—

இந்தப் படுகொலைச் சம்பவத்தைப் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் கண்டித்துள்ளார். பலஸ்தீன தீவிரவாத இயக்கமான ஹமாஸும் இச்செயலைக் கண்டித்துள்ளது. (ஐ)

## பீதியால் உல்லாசப் பயணிகள் எகிப்தை விட்டு வெளியேற்றம்!

### உள்துறை அமைச்சர் ராஜினாமா

லக்ஸோர், நவ. 20

எகிப்தின் பிரபல உல்லாச நகரமான லக்ஸோரில் கடந்த திங்களன்று வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் 60 பேர் படுகொலை செய்யப்பட்டிருப்பதை அடுத்து அங்கு தங்கியிருந்த வெளிநாட்டுப் பயணிகள் நூற்றுக்கணக்கானோர் தத்தமது தாயகங்களுக்குத் திரும்பிச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

பிரிட்டிஷ் பிரஜைகள் உட்பட உல்லாசப் பயணிகள் தமது பயணக் காலத்தைக் குறைத்துக் கொண்டு வெளியேறுமாறு பயண நிறுவனங்கள் சில அறிவுறுத்தியுள்ளன.

இஸ்லாமிய அடிப்படைவாதிகள் நடத்திய இத்தாக்குதல் எகிப்தின் உல்லாசப் பயணத்துறைக்குப் பலத்த அடியாக அமைந்துள்ளது.

படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற லக்ஸோர் நகருக்கு அதிபர் ஹொஸ்னி முபாரக் விஜயம் செய்தார். உல்லாசப் பயணிகளின் பாதுகாப்பு அதிகரிக்கப்படும் என்று அங்கு வைத்து அவர் உறுதியளித்தார்.

60 வெளிநாட்டவரைப் பலிகொண்ட இச்சம்பவத்துக்கு தார்மீகப் பொறுப்பேற்று எகிப்திய உள்துறை அமைச்சர் பதவி விலகியுள்ளார். புதிதாக ஒருவரை அப்பதவியில் அதிபர் முபாரக் நியமித்துள்ளார். (ஐ)

## ஈராக் நெருக்கடியைத் தீர்க்க கிளின்ரன் விருப்பம் தெரிவிப்பு

தெஹ்ரான், நவ.20

ஈராக்குக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப்பரிசோதகர்கள் குழுவுக்கும்இடையில் எழுந்துள்ள பிணக்கை சமாதானமாகத் தீர்த்துவைக்க விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் உள்ள இரசாயன ஆயுதங்கள், அணு ஆயுதங்கள் உலக அமைதிககுப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன என்றும்—

இதனாலேயே ஒரு முறையான பரிசோதனை அவசியம் என்றும்—கிளின்ரன் தெரிவித்தார்.

இதேவேளை— ஈராக் அமெரிக்காவுடன் மோத விரும்பவில்லை என்று ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்ன் தெரிவித்துள்ளார்.

ஆயினும் இந்த நெருக்கடிக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என தாம் விரும்புவதாகவும் சதாம் ஹுசேய்ன் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில்— அமெரிக்க விமானத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தில் பக்தாத் மருத்துவமனைகளிலிருந்து நோயாளர்கள் பலர் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## இந்திராகாந்தி 80 ஆவது பிறந்தநினம்

புதுடில்லி, நவ. 20

முன்னாள்பிரதமர் இந்திராகாந்தியின் 80 ஆவது பிறந்த தினம் நேற்று இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜனாதிபதி கே. ஆர். நாராயணன், பிரதமர் ஐ.கே. குஜ்ரால், திருமதி சோனியாககாந்தி உட்படப் பலர் இந்திராகாந்தியின் சமாதியில் மலரஞ்சலி செலுத்தினர்.

நேற்று முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இந்தியாவில் தேசிய ஒமைப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு மாதம் வளர்ச்சி அடைந்த பேட்டுக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. நேரம்: 9 மணி தொடக்கம் 12 மணி வரை. இடம்: கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், 23, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
[51249]

பிறிச், (F) பான், தையல் மெஷின், வீட்டுத்தளபாடங்கள் மற்றும்மேலதிகமானவீட்டுப்பாவனைப் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தங்கவேல், 224/17, பத்திர காளி அம்மன் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
[51264]

வெள்ளை, கறுப்பு 1½மாத பொமனேரியன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (பூச்சிநீக்கப்பட்டது) தொடர்பு: றோசாத்தோட்டம், தலங்காவற்பிள்ளையார் கோயில் முன்பாக, திருநெல்வேலி மேற்கு.
[51263]

நல்ல நிலையில் உள்ள மொறிஸ் ஒக்ஸ்போட், ஒஸ்ரின்கேம்பிறிஜ்(A/55)இரண்டு கார்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.11, கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
[51271]

### தவறிவிட்டது

ஊரெழுவைச் சேர்ந்த பாலசிங்கம் விஜயராஜா ஆகிய எனது விசேட அடையாள அட்டை மருதனார் மடம், சங்கானை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் பல நோ. கூ. சங்கம் முன்பால் உள்ள தேநீர்ச்சாலையிக ஒப்படைத்துதவவும்
[51257]

அந்தோனிப்பிள்ளை மேரி லீமலர் என்பவரது 47033190V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன சின்னக்கடைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். No. 105, சப்பர்வீதி, யாழ்ப்பாணம்.
[51279]

### மணமக்கள் தேவை

அரசாங்க உத்தியோகம் பார்க்கும் 28 வயது சைவ உயர்குல ரோகிணி நட்சத்திர பட்டதாரி மணமகளுக்கு பட்டதாரி மணமகனும், தனியார்துறை, தொழில்நுட்பவியலாளர் (சுயமாகதொழில் புரிபவர்) வயது 27. நட்சத்திரம் அனுஷம் மணமகனுக்கு மணமகளும் தேவை. RAM Live Long Guide, 39, K.K.S. வீதி, கொக்குவில்.
[51266]

### அக்கரைச்சீமையில்

275 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின், இலங்கை-இங்கிலாந்து நாவல் 25/- இன்னும் சில பிரதிகளே உள்ளன. நாடகம் எழுதுவது எப்படி? ஒரு நாடகமும் 22 கட்டுரைகளும். [51277]

### JOB WANTED

A retiredenergetic, hard working person aged 55, knows all Three languages, English Typing, Correspondence and Accountancy seek employment. Preferably under International or Respectaple Charitable Organisations. Advt. No: 666, C/o UTHAYAN, JAFFNA.
(51273)

### தென்னம் நாற்றுகள்

நல்லினத் தென்னம் நாற்றுகள் (பல இனங்கள்) உடன் விற்பனைக்குண்டு. குறுகிய காலத்தில் பலன்தரக் கூடியவை, வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டி வீதி, மீசாலை.
[51002]

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
## பதவி வெற்றிடம்

தற்காலிக
**புத்தக நிலைய முகாமையாளர்**

சம்பள அளவுத்திட்டம்:- 1030 — 1355
20X10— 25X5

(இத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கபபடும்)

சம்பள இல — 15
தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் குறித்த துறையிலான பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் குறித்த துறையிலான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) பத்திரம்/ க. பொ. த. சாதாரண தரத்தில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம், தமிழ் மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி.

வயதெல்லை: 25 — 40

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

விண்ணப்பம் அனுப்புவோர் விண்ணப்பத்தை 10/- செலுத்தி யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையில் பெற்று 25 - 11 - 97 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, யாழ்ப்பாணம்.

— மாவட்டச் செயலாளர்

(சி-2106)

## மீண்டும் "புத்தூக்கி" மென்பானம்

### குளிர்பானப் பிரியர்களே...
### உங்களுக்கொரு நற்செய்தி!

குடாநாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாகச் சொற்ப காலமாக உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ''புத்தூக்கி'' மென்பானம் தற்போது உற்பத்திமேற்கொள்ளப்பட்டு 10 - 11 - 97 ஆம் திகதியன்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. கே. பரணிருபசிங்கம் அவர்களால் வைபவ ரீதியாக விற்பனை ஆரம்பித்து வைக்கப்பட்டதென்பதைப் பாவனையாளர்களுக்கு அறிபத்தருவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

புதிய முறையில் மெருகூட்டப்பட்டு சுகாதார முறையில் பல்வேறு சுவைகளில் தயாரிக்கப்பட்டு உங்களிடம் வந்தடையும் எமது ''புத்தூக்கி'' தயாரிப்புகளான,

**★ ஒரேஞ் பார்லி ★ ஒரேஞ் ஸ்பெசல் ★ லெமன்**
**★ லெமன் ஸ்பெசல் ★ நெக்ரோ ★ கிறீம் சோடா**

மென்பானங்களை இன்றே வாங்கிச் சுவையுங்கள்:

''புத்தூக்கி'' மென்பானங்களைக் கொள்வனவு செய்ய விரும்பும் வியாபார நிறுவனங்களும், விற்பனை முகவர்களும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

300 மி. லீ வெற்றுப் போத்தல்களும்
300 மி. லீ. வெற்றுப் பெட்டிகளும் கொள்வனவு செய்யப்படும்.

தயாரிப்பாளர்:-
**யாழ். பனை தென்னை வள அபிவிருத்தி**
**கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி,**

75/1, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி/2102)

## விலைக் கூறு கோருதல்

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகத்திற்கு தமிழ், ஆங்கில எழுத்துக்கள், றோலர், ஆம் (ARM) சக்கர்பார் மற்றும் உபகரணங்கள் தேவை. யாழ்ப்பாணத்தில் இவற்றை வழங்கக் கூடியவர்கள் 25 . 11 . 97 இற்கு முன்னதாக விலைக்கூறை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும். பொருள்களின் விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்டச் செயலாளர்,
**யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை,**
**14, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/2107)

## கட்டைவேலி- நெல்லியடி
## ப. நோ. கூ. சங்கம்
### கிளைக்குழுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டவணை தயாரிக்கும்
### அறிவித்தல்

எமது சங்கக் கிளைகளின் அங்கத்துவப் பேரேடு 1997 . 12 . 31 இல் முடிவுறச் செய்து கிளைத்தேர்தலுக்கான வாக்காளர் அட்டவணை தயாரிக்கப்படவுள்ளது இவ்வாறு வாக்காளர் ஆவதற்கு:-

1. ஒரு பங்கு (ருபா 100) ஆதநல் உடையவராக இருத்தல் வேண்டும்.
2. பங்குப் பணத்தைத் தவணை முறையில் கட்டி அங்கத்துவப் பேரேட்டில் பதிவு செய்தவர்கள அத்திகதியிலிருந்து ஒருவருடத்துக்குள் மீதிப் பணத்தைச் செலுத்தி இருக்க வேண்டும்.
3. அங்கத்துவப் பேரேட்டில் பதிவு பெற்று ஒரு வருடம் முடிந்திருக்க வேண்டும்.
4. குறைப்பங்கு உடையவர்கள் மிகுதியை உப விதிகளின் குறிப்பிட்ட கால எல்லைக்குள் செலுத்தாவிடத்து செலுத்திய திகதியிலிருந்து ஒரு வருடம் காத்திருக்க வேண்டும்.

ச. செவ்வந்திநாதர் — தலைவர்
பு. இராதாகிருஷ்ணன் — செயலாளர்.

20 . 11 . 97.
(சி/2100)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஆ. தருமராசா

தோற்றம்: **15—06—1970**
மறைவு: **01—12—1996**

ஆண்டுத் திதி நிகழ்வு இன்று 20 - 11 - 1997 வியாழக்கிழமை சிறுப்பிட்டி வீட்டில் நடைபெறும்.

செல்ல மகனே! நீ மறைந்து ஆண்டொன்று சென்றாலும், உன் அன்பும், புன்சிரிப்பும், ஓசையும் எம்மைவிட்டு அகலாது! உன் நற்குணங்கள் விவரிக்க முடியாது! உன் சகோதரர்கள் வெளிநாடுகளில் உன் மறைவைக்கேட்டு திகைப்படைந்தார்கள், உன் அன்பை அள்ளிக்கொடுத்து விட்டு எம்மைவிட்டு இறைவனண்டை சென்றாயே?

அன்னாரின் நினைவஞ்சலி 20-11-97 ஆம் திகதி நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்று நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல செல்லப்பிள்ளையாரையும், மனோன்மணி அம்பாளையும் வேண்டுகின்றோம்.

பிரிவினால் வருந்தும்:
அம்மா, ஐயா, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
மருமக்கள்மார், உற்றார், உறவினர்கள்.

தகவல்:
ஐ. சிவானந்தராசா,
சிறுப்பிட்டிதெற்கு,
நீர்வேலி.

(51125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# தொல்புரம் விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்படும்

தொல்புரம் கமநல சேவை நிலையப் பகுதியில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்பட வுள்ளது.

பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு, விவசாயின் பெயர் போன்ற விவரங்களை இப் பிரதேசத்தில் செயற்படும் ஏழு விவசாய சம்மேளனங் களும் சேகரித்து தொல்புரம் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத் தரிடம் கையளித்துள்ளன. வெகு விரைவில் ஏக்கர் ஒன் றுக்கு அரை அந்தர் வீதம் விவசாயிகளுக்கு யூரியா விநி யோகிக்கப்படவுள்ளது.

# ஊர்காவற்றுறை பிரதேச சபை

## வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் பிரிவு 268இன் பிரகாரமான

# அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் அனுமதியின்றி சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட (முன்னைய ஊர்காவற்றுறை பட்டின சபை, நாரந்தனை, காரைநகர் தெற்கு, காரைநகர் வடக்கு, அனலைதீவு, எழுவைதீவு கிராம சபைகள்) பிரதேசங்களில் கட்டடங்கள் கட்டுதல், திருத்தங்கள் செய்தல், வீதியோர எல்லைச்சுவர் போன்றவற்றை அமைத்தல் மேற்படி சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே இதற்கான அனுமதியை இப்பிரதேச சபையிலிருந்து வழங்கப்படும் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக விவரங்களைப் பிரதேசசபை பணிமனையில் அறிந்து கொள்ளலாம்.

ஜே. எக்ஸ். செல்வநாயகம்,
விசேட ஆணையாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை.

(சி/2104)

# விவேகானந்தர் நூற்றாண்டு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 20

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் எதிர் வரும் 24 ஆம் திகதி திங்கள் காலை 9 மணியளவில் யா/சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையில் இடம் பெறவுள்ளன.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ருபானந்தா இந் நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார். (ஐ-ரீ)

# பெற்றோர் தின விழா

யாழ்ப்பாணம், நவ. 20

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை பெற்றோர் தின விழாவும், பரிசளிப்பும் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ.சிவபாதசேகரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வலயம் - 1 கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசா பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள பொறியியலாளர் கு. சிவபாலன், கல்வித் திணைக்கள கணக்காளர் தி. சுதந்திரபாலன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராசா. நல்லூர் பிரதேச செயலக அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி இ. இரத்தினராசா, ச. சின்னையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-5)

# யாழ்ப்பாண மாநகரசபை

## வழங்குநர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் -1998.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1997 மார்கழி 16 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பொருள்கள்

1. காகிதாதிகள், எழுது பொருள்கள்
2. அலுவலக உபகரணங்கள்
3. மேல் நாட்டு மருந்துவகைகள், வைத்திய உபகரணங்கள்
4. சித்தமருத்துவ மூலிகைகள், மருந்துகள்.
5. கோலவுடைத் துணிகள், யன்னற்துணிகள் ஏனைய துணிகள்.
6. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற்பொருள்கள்
7. கட்டடப் பொருள்கள் (சிமெந்து. கூரைத்தகடு, ஓடுகள் முதலியன)
8. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன
9. கற்கள், மணல்கள்.
10. நீர்வழங்கு பொருள்கள், பிவிசி குழாய்கள் முதலியன.
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்.
12. மின்சார இயந்திரப் பொருள்கள், மின்கருவிகள்.
13. விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்
14. எரிபொருள் உராய்வு நீக்கிகள், கிறிஸ்.
15. இரும்புப் பொருள்கள்.
16. பனைமரங்கள், சலாகைகள்.
17. நூலகங்களுக்குரிய நூல்கள்.
18. வாகனங்களுக்கான பற்றறிகள், ரயர், ரியூப் முதலியன.
19. திராந்திகள், றீப்பைகள், பலகைகள்.
20. தும்புத்தடி, விளக்குமாறு. நார்க்கடகம், கால்துடைப்பம், இளக்கயிறு. தேடாக்கயிறு முதலியன.

சேவைகள்

1. அச்சிடுதல்.
2. தட்டச்சு இயந்திரம் திருத்தம்.
3. மோட்டார் வாகனங்கள் திருத்தம்
4. ரியூப் ஒட்டுதல்.
5. ஓட்டு வேலைகள், உலோக வேலைகள்.
6. ஏற்றியிறக்கல் வேலைகளும் பாரங்குறைந்த வாகனங்கள் வாடகைக்கு விடுதல் (சுத்திகரிப்பு வேலைப்பகுதி ஏற்றியிறக்கல் வேலைக்கு ரைக்ரர் வாடகைக்குவிடல்)
7. கோலவுடை தைத்தல்.
8. மின்மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
9. ஏற்றியிறக்கல் தொடர்பாக மாட்டுவண்டிலை சேவைக்கு அமர்த்துதல்.

கடித உறையின் இடதுபக்க மேல்முனையில் வழங்குநர்கள் / சேவைகள் 1998 எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா 250 பெறுமதியான ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை, தபாற் கட்டளையை இணைத்து அனுப்ப வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் நானாவித இறைவரிக்கிளையில் நேரடியாகச் செலுத்தமுடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து கூறுவிலைகள் கோரவும் மாநகரசபைக்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது கூறுவிலைக்ளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்கள்/ சேவைகளை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பங்களும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை.
2. பெயரும் விலாசமும்.
3. தொலைபேசி இலக்கம்.
4. வியாபாரப்பதிவின் இலக்கமும் திகதியும்.
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்.
7. கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்.

**மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.**

மாநகரசபை,
யாழ்ப்பாணம். 14 - 11 - 1997

(சி / 2113)

# வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம் சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்-1998

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:- 1997—11—27 பிற்பகல் 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 1997—11—28 முற்பகல் 10.00 மணிவரை
03. கேள்விகள் திறக்கும் திகதி:- 1997—11—28 முற்பகல் 11.00 மணி
04. ஏனைய விவரங்கள் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப்பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது ) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்கப் படாதவை) |
|---|---|---|---|---|
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | 50/- | 8,000/- | 1,000/- | 100/- |
| 2. ஆட்டிறைச்சிக் கடை | 50/- | 6,000/- | 500/- | 100/- |
| சங்கானை உப அலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | 100/- | 1,17,000/- | 3,000/- | 200/- |
| 2. ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 27,000/- | 1,000/- | 100/- |
| 3. கருவாட்டுக் கடை | 75/- | 5,000/- | 500/- | 100/- |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | 75/- | 42.000/- | 1,500/- | 200/- |
| 2. ஆட்டிறைச்சிக் கடை | | 20,000/- | 1,000/- | 100/- |
| கேள்விக்காரர் கடை ஒழுங்கு செய்தல் வேண்டும், | | | | |
| அராலி உப அலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | | 30,000/- | 1,000/- | 100/- |
| கேள்விக்காரர் கடை ஒழுங்கு செய்தல் வேண்டும். | | | | |
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 1. சத்தியக் காட்டுச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு உட்பட] | | 83,000/- | 2,000/- | 100/- |
| 2. பலலசுட்டி சந்தை | | 8,000/- | 500/- | 100/- |
| 3. தொல்புரம் மத்திய சந்தை | | 5,500/- | 500/- | 100/- |
| 4. பொன்னாலை சந்தை (மூளாய்) | | 20,000/- | 500/- | 100/- |
| சங்கானை உப அலுவலகம் | | | | |
| மரக்கறிச் சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | | 2,50,000/- | 5,000/- | 100/- |
| 1. மீன் சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | | 74,000/- | 2,000/- | 100/- |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 1. பொதுச் சந்தை | | 11,000/- | 500/- | 100/- |

**கா. சந்திரராசா**
விசேட ஆணையாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை
சுழிபுரம்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, தலைமையகம்,
சுழிபுரம்.
1997 - 11 - 13

(சி/2112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

# எமது துயரங்கள் நீங்க எங்களுக்கு உதவுங்கள்

## கைதானோர் காணாமற்போனோர் சங்கம் மகஜர்

கைதாகிய எமது செல்வங்களைப் பிரிந்து சொல்லொணா துயருடன் வாழும் பெற்றோர், உறவினர்கள் ஆகிய எமது துயரை உங்கள் பண்பான சேவையாலும், ஆண்டவன் கிருபையாலும் போக்க வழி செய்யுங்கள்.

கைதானோர், தகவல் தெரியாதோர் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் இணைந்து மேற்படி சங்கத்தின் அலுவலகத்தில் இருந்து நேற்று முன்தினம் நடத்திய அமைதி ஊர்வலத்தின் போது அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றுக்கு அளித்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அன்னையர் முன்னணியும், கைதானோர் தகவல் அற்றோர் பாதுகாவலர் சங்கமும் இணைந்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகிய சர்வதேச ஸ்தாபனங்களிடம் தாழ்மையுடனும் மன்றாட்டத்துடனும் விண்ணப்பித்துக்கொள்வது என்னவென்றால் உங்களின் மேன்மையான நடவடிக்கையினால் எமது கோரிக்கைகளுக்குப் பரிகாரம் பெற்றுத்தரவேண்டும் என்பதே.

உங்கள் மதிப்புக்குரிய, உலகளாவிய சேவையை மெச்சுகின்றோம்.

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் கடல் கடந்து வந்து மனித குலத்துக்கு ஏற்படும் துன்பங்களை துயரங்களை நேரில் கண்டு அறிந்து சேவையாற்றிவருகிறீர்கள்.

கைதாகி தகவல் தெரியாது ஒரு வருடத்துக்கு மேலாக இருக்கும் பிள்ளைகளின் நிலைமை பெற்றோர், மனைவிமார் உறவினர்களாகிய எமக்கு புரியாத புதிராக இருக்கிறது.

உங்களுக்கு எமது கைதாகிய பிள்ளைகள் விடயமாக முன்னர் முறைப்பாடுகள், விவரங்கள் தரப்பட்டு உள்ளன. இதுவரை 400க்கும் மேற்பட்டோர் கைதாகி தகவல் அற்று இருக்கிறார்கள். இப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

ஜனாதிபதியின் வேண்டுதலின் பேரில் முழுமையான நம்பிக்கை வைத்து சுபீட்சமான வாழ்வு வாழும் நோக்கில் திரும்பவும் இராணுவ கட்டுப்பாட்டு இடங்களுக்குத் திரும்பினோம்.

ஜனாதிபதியின் உத்தரவாதங்கள், அவர் மேல் வைத்த நம்பிக்கைகள் இழக்கப்படும் நிலையில் கைதுகளும், காணாமற்போகும் சம்பவங்களும் தொடர்கின்றன.

கைதுசெய்யப்பட்ட எமது செல்வங்கள் குற்றவாளிகளாக காணப்படும் பட்சத்தில் அவர்களை நீதியின் முன் நிறுத்தும்படியும் -

அவர்கள் இருக்கும் இடங்களை பெற்றோர், உறவினர்களுக்கு அறியத்தரும்படியும் -

அவர்களிடம் இருந்து விவரங்கள் பெறச்செய்யும்படியும் -

அரசுடனும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடமும் தொடர்பு கொண்டு எமது செல்வங்களின் இருப்பிடங்களை எமக்கு அறிய வழிவகைகளை செய்து உதவும்படியும் -

தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம். (இ-103)

## ஞானப்பிரகாசம் நினைவு ஆராதனை

யாழ்ப்பாணம், நவ. 20

அங்கிலிக்கன் திருச்சபையின் முன்னாள் பேராயர் அதிவண. ஜே. ஜே ஞானப்பிரகாசம் அடிகளாரின் நினைவஞ்சலி ஆராதனை நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சுண்டுக்குளி பரி. யோவான் ஆலயத்தில் நடைபெறும்.

அதிவண ஞானப்பிரகாசம் அடிகளார் பல ஆண்டுகள் யாழ்ப்பாணக் குரு முதல்வராகவும், 1978 இல் இருந்து 1986 வரை கொழும்புக் குரு முதல்வராகவும், 1987 இல் இருந்து 1992 வரை கொழும்புப் பேராயராகவும் இறைதொண்டு புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்

**திரு. நா. ஆனந்தராசா**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நாகநாதன் வள்ளிப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துக்கத்தில் நாமும் பங்கேற்பதுடன், எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/பன்னாலை சேர். கனகசபை
அ. த. க பாடசாலை.

காரைக்கால் சிவன் கோயிலடி,
இணுவில்.

(சி/2116)

## கண்ணீர் அஞ்சலி

புலோலி தென்மேற்கு முருகையன் கோயிலடி அறிவகம் சனசமூக நிலைய வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்தவரும், சீ. என். ஏ. கலாலய நாடக மன்ற எழுத்தாளரும், தயாரிப்பாளரும், நடிகரும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊழியருமான

**கார்த்திகேசு தங்கராசா (அண்ணா)**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ச. பன்னீர்ச் செல்வம் குடும்பம்
சந்தா தோட்டம்,
புலோலி வட கிழக்கு.

[51286]

# வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவுத் திணைக்களம்

## கேள்விப்பத்திரம் மூலம் மோட்டார் வாகனங்கள் விற்பனை

பின்வரும் வாகனங்களை கேள்விப் பத்திரம் கோரி விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1997—12 10 ஆம் திகதி 10 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| | வாகன இல. | இனம் | மாதிரி |
|---|---|---|---|
| 01. | 5 ஸ்ரீ 5334 | போர்கெட்டினா | கார் |
| 02. | 6 ஸ்ரீ 9471 | பேர்ஜோ | கார் |

**வாகனங்களைப் பரிசோதனை செய்தல்**

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்கள் வாராந்த வேலை நாள்களில் அவரது அலுவலகத்தில் சந்தித்து முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3-30 மணி வரை வாகனங்களைப் பரிசீலனை செய்யலாம்.

**கேள்விப்பத்திரம் வழங்குதல்**

கேள்விப்பத்திரப் படிவங்கள் யாழ்ப்பாணம் கூ. அ. உ. ஆணையாளர் அவர்களிடமிருந்து அலுவலக வேலை நாள்களில் 97-11-28 ஆம் திகதிக்கு முன்னர் ரூபா 25/- (திருப்பிப் பெறாத) கேள்விப்பத்திரக் கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்டு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனிக் கேள்விப்பத்திரகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திர விண்ணப்பதாரியும் மீளச்செலுத்தக்கூடிய வைப்பாக ரூபா 1000 செலுத்திப்பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**கேள்விப்பத்திரங்கள் ஒப்படைத்தல்**

கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் சமர்ப்பிக்கப்படுவதுடன் கேள்விப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்திப் பத்திரங்களைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் கூ. அ. உ. ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரம் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடப்படலாம். அல்லது பதிவுத்தபால் மூலம் 1997. 12. 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்,

'கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்',
கூட்டுறவு அலுவலகம்
18/10, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

சகல கேள்விப்பத்திரங்களும் 1997 - 12 - 10 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திர கடித உறையின் இடது பக்கத்தில் ''வாகன கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை**

கேள்விப்பத்திரங்கள் யாவும் 1997 - 12 - 12 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு கூ. அ. உ. ஆணையாளர் அவர்களால் ஆராயப்பட்டு தீர்மானிக்கப்படும். கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களது பிரதிநிதியோ கேள்விப்பத்திரம் ஆராயப்படும் போது பிரசன்னமாகி இருக்கலாம்.

மேலதிகமான தகவல்கள் யாவும் யாழ்ப்பாணம் கூ. அ. உ. ஆணையாளர் அவர்களிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி கார்களைக் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரியில் அலுவலக நேரங்களில் எம்முடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

**யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை அச்சகம்,**
40/1, நாவலர் வீதி (ஐந்து சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.

**கூ. அ. உ. ஆணையாளர்,**
யாழ்ப்பாணம்.

(சி-2114)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 20 — 01 — 1984



ஆண்டவன் அடியில்: 20 — 11 — 1989

செல்வி

**சித்திரகலா அமரசேனாதிபதி**

**கண்ணீர்ப் பூக்கள்**

சித்திரமே ஆடி அக மகிழ்ந்து விளையாடினாய் — உன்
மழலைப் பேச்சில் மகிழ்ந்திருந்தோம் — நாம்
எம் குடும்பத்துக்கு ஒளிபரப்பிய விளக்கே சித்திரா!
இன்று எங்கேயம்மா சென்று விட்டாய்?
கொடிய அரக்கன் அவன் — மறலி
சிறிதும் தாட்சணியமின்றி வந்தானே அன்று
பறித்தானே உன் உயிரை சித்திரா!
எட்டு ஆண்டுகள் கடந்தும் இன்றும்
என்றும் எம் கண்ணில் நீங்காததிரை உன் நினைவு
எங்கு சென்று ஆறுவோம் நாம்?
எப்போ உன்னைக் காணுவோம் வாயார
நெஞ்சு கொதிக்குது உள்ளம் ஏங்குது சித்திரா!

உங்கள் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, ஆசை அண்ணா (வசி),
பெரியப்பா, பெரியஐயா,
மாமி குடும்பத்தினர் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

இ. அமரசேனாதிபதி,
'சுதாபவனம்,'
மயிலியதனை,
தொண்டமானாறு.

(51282)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களுக்காக

**பாட்டா BATA பாட்டா**
**பாதணிகள்**

யாழ். நகரில் கொழும்பு விலையுடன் போக்குவரத்துச்
செலவுடன் விற்பனையாகின்றன.
ஏமாற்றங்களைத் தவிர்ப்பதற்காக

**பாட்டா**

## மொத்த விற்பனை நிலையம்

350, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அன்பாக அழைக்கின்றது.

சில பொருள்களுக்கு நத்தார்ப் பண்டிகைக்கான
விசேட கழிவுகள் உண்டு.

(51269)


## வீட்டுத்தோட்ட உபகரணங்கள்

யாழ். பிரதேச. செயலர் பிரிவில் 50 வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களுக்கு தலா 500 ரூபா பெறுமதியான உபகரணங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இதே போன்று நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவிலும் 50 வீட்டுத் தோட்ட செய்கையாளர்களுக்கு 500 ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக யாழ். நல்லூர் பிரிவுகளுக்கான விவசாய போதானாசிரியர் திருமதி – லதா ஜனகன் தெரிவித்தார். (ஐ-135)

## சிறுமி படுகாயம்

தந்தை ஒருவர் நாய்க்கு அடித்த அடி தவறுதலாக சிறுமி மீது பட்டதால் சிறுமி படுகாயம் அடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏழாலை தெற்கில் கடந்த திங்களன்று இச்சம்பவம் இடம்பெற்றது.

தனது மகளான ஐந்து வயதுச் சிறுமியை சாப்பிட விடாது தொந்தரவு செய்த நாயை காலால் அடிக்க முனைந்த போது நாய் விலகியதால் அந்த அடி மகள் மீதுபட்டது. இதனாலேயே அந்தச் சிறுமி படுகாயமடைந்தார்.

சவுந்தரராஜா சுலோஜனா (வயது 5) என்ற சிறுமியே காயமடைந்தவராவார்.

## சொற்பொழிவு

திருநெல்வேலி, நவ. 20

யாழ். சைவ பரிபாலன சபையினால் எதிர்வரும் சனிக்கிழமையன்று யாழ். நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் நடத்தப்படவுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசையில் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ''நாவலர் நற்பணிகள்'' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துவார். விசேட பூசை, பஜனை என்பனவும் இடம் பெறவுள்ளன. (ஐ-135)

# தெற்கில் ஆள்கள் காணாமற் போனமை:

# பொலீஸார், படையினர் 2 ஆயிரம் பேர் சம்பந்தம்

கொழும்பு, நவ. 20

ஐ. தே. க. அரசின் காலத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பான சம்பவங்களுடன் பொலீஸ், முப்படைகளைச் சேர்ந்த 2 ஆயிரம் பேர்கள் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என விசாரணைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயகா தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று மாலை அலரிமாளிகையில் இடம்பெற்ற வைபவமொன்றில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

தெற்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட 3 ஆணைக்குழுக்களுக்கும் சுமார் 33,000 புகார்கள் கிடைத்தன. அதில் 18 ஆயிரம் முதல் 20 ஆயிரம் புகார்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

சம்பந்தப்பட்ட 2 ஆயிரம் பேர் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ-21)

## 88 தபாற் பொதிகள் யாழ். வந்தன

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். மாவட்டத்திற்கு வெளியூர் தபால்கள் அடங்கிய 88 தபாற் பொதிகள் நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

அப்பொதிகள் நேற்றைய தினமே தரம்பிரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருவதாக யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-ரீ)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 – 10 – 1976

மறைவு: 20 – 11 – 1995

## செல்வி விஜிதா சந்திராசா

(A/L 94/95 பழைய மாணவி, உடுவில்/சண்டுக்குளி மகளிர் கல்லூரி)

மழைகூட ஒருநாளில் தேனாகலாம்
மணல்கூட அந்நாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவையாவும் நீயாகுமோ?
அன்போடு எமை அணைக்கும் சேயாகுமோ?
சென்றது ஈராண்டு - நீ
சென்ற பாதை யாதம்மா?

உன் பிரிவால் வாடும்:

தாயார் (தவம்) மற்றும்
உற்றார், உறவினர்.

அரசடி றோட்,
கேணியடி,
திருநெல்வேலி.

(51242)



உ
சிவமயம்
''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெலாம்''

## யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை
## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

நாள்: - 22 - 11 - 1997 சனிக்கிழமை
நேரம்: - மு. ப. 9 - 30 மணி (பழைய நேரம்)
இடம்! - நீராவியடி, நாவலர் ஆச்சிரம மண்டபம்

விசேட பூசை, திருமுறை ஓதல் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் (முன்னாள் அதிபர் இராமநாதன் கல்லூரி) ''நாவலரின் நற்பணிகள்'' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துவார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(51278) சைவபரிபாலன சபை



# ஊர்காவற்றுறை பிரதேசசபை
## இறைச்சிக் கடைகளுக்கான
# கேள்வி அறிவித்தல் - 1998

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் இறைச்சிக்கடைகளை 1998 ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1998 டிசெம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் 09 12 1997 ஆம் திகதி முற்பகல் 10 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்கள் ஊர்காவற்றுறை பிரதேசசபை அலுவலகத்தில் 05.12.1997 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படி மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணத்தையும். மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்விக்காரரோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட பிரதிநிதியோ பிரசன்னமாயிருக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை விசேட ஆணையாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் அரக்கு முத்திரையிடப்பட்டுத் தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும் அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்இடப்பட வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் இவ்வலுவகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை | ரூபா. 18,500 | ரூ. 250 | ரூபா. 150 |
| 02. நாரந்தனை மாட்டிறைச்சிக்கடை | ரூபா. 25,500 | ரூ. 250 | ரூபா. 150 |

ஜே. எக்ஸ். செல்வநாயகம்,
விசேட ஆணையாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை 'அலுவலகம்'
ஊர்காவற்றுறை. 19. 11. 1997.

(சி - 2105)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னையா பாலசுப்பிரமணியம்

(முன்னாள் சாரதி, இலங்கை புகையிரதப் பகுதி)

தோற்றம்: 01 – 05 – 1933

மறைவு: 21 – 10 – 1997

திதி: 20 — 11 — 1997

மாதம் ஒன்று பறந்தோடி விட்டதப்பா இன்னும்
நித்தமுனைத் தேடுகிறோம்; நிழல்தேடித்
திரிகின்றோம்
அத்தன்தன் திருவடியை அடைந்த எம் ஐயாவே!
பக்தியோடு வேண்டுகிறோம்பரமன்தாள் சாந்திக்காய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

30/3, நீக்கிலஸ்லேன்,
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

(51272)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ். வலயம் 1 இன் பாடசாலைகளுக்கு இடையில் நடந்த உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளுக்கு, இறுதியாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர் சு. இரத்தின ராஜா, விசேட விருந்தினராகக் கலந்து கொண்ட 512 படையணியின் தளபதி பிரிகேடியர் மெண்டிஸ் ஆகியோர் பரிசுகளை வழங்குவதையும் அந்த பிரிகேடியர் மெண்டிஸ் உரை நிகழ்த்துவதைப்யும் படங்களில் காணலாம்.

# விளையாட்டு ஊடாகச் சமாதானம்; மாணவருக்கு பிரிகேடியர் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

விளையாட்டு ஊடாக சமாதானத்தை அடைவோம் (Peace Throguh Sports). வாருங்கள்!

— இவ்வாறு யாழ். மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார் யாழ். நகரில் நிலை கொண்டுள்ள 512 பிரிகேட் படையணியின் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ்

யாழ். கல்வி வலயம் 1 இன் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்களில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த செவ்வாயன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

உதவிக் கல்விப் பணிப்பாளர் டி. ஆர். அருமைநாயகத்தின் தலைமையில் நடைபெற்ற இந்த இறுதியாட்ட நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் எஸ். இரத்தினராசா கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரிகேடியர் மெண்டிஸ் —

யாழ்ப்பாண வீரர்கள் உதைபந்தாட்டத்தில் தேசிய மட்டங்களில் உயர்வு நிலையைப் பேணியதையும், பல யாழ். வீரர்கள் ஸ்ரீலங்கா தேசிய அணிகளில் அங்கம் வகித்ததையும் நினைவு கூர்ந்தார்.

கடந்த கால நெருக்கடி காரணமாக யாழ். வீரர்கள் இந்தவாய்ப்புக்களை இழந்தனர் என்றும்—

ஆனால் இனிவரும் காலங்களில் அந்த வாய்ப்புக்களை அவர்கள் பெறக்கூடியதாக சகல உதவிகள், ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்றும்— அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய உதைபந்தாட்ட நிகழ்வுகள் யாழ். வீரர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றும் அவர் சொன்னார். விளையாட்டுத்துறையில் இத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் விரிவடையச் செய்யப்படும் என்று கூறிய அவர், விளையாட்டுத்துறை மூலம் சமாதானத்தை அடைவதற்கு வரும்படி யாழ். மாணவர்களுக்கு அறைகூவல் வைத்து பகிரங்க அழைப்பும் விடுத்தார்.

## போட்டி முடிவுகள்

மேற்படி உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 20, 18 வயதுப் பிரிவுகளில் யாழ். மத்திய கல்லூரி அணிகளும்—

16 வயதுப் பிரிவில் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயமும்—

சாம்பியனாகி, வெற்றிக் கிண்ணங்களைச் சுவீகரித்துக் கொண்டன.

வெற்றியீட்டிய அணிகளின் வீரர்களுக்கு வங்கிகளின் அனுசரணையுடன் வங்கி சேமிப்புச் சான்றிதழ்களும்—

கால் இறுதி ஆட்டம் வரைத் தெரிவான அணிகளுக்கு உதைபந்துகளும்— பரிசாக வழங்கப்பட்டன.

இப்போட்டிகளுக்கான வெற்றிக்கிண்ணங்களை மாகாணக் கல்வி அமைச்சின் உதவியுடன் 512 பிரிக்கேட் படையணி பெற்று வழங்கியிருந்தது தெரிந்ததே.

(உ)

# நெடுந்தீவின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின

கடந்த மூன்று தினங்களாகப் பெய்த பெரும் மழை காரணமாக நெடுந்தீவின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

சாராப்பிட்டி குடியிருப்புப் பகுதி உட்பட தாழ்ந்த பகுதிகளில் குடியிருந்த மக்கள் வெள்ளம் காரணமாக தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

முதலியார்வளவு, பூங்குளம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீதி உட்பட பிரதான வீதியில் வெட்டுக்களியை அண்டிய பகுதிகளில் வீதிகளுக்கு மேலாக வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறது.

தென்பகுதியில் மேய்ச்சல் நிலங்களை மூடி வெள்ளம் தேங்கிக் கிடப்பதால் கால் நடைகள் உணவின்றி அலைகின்றன—

(ஐ-111)

# தமிழ்தட்டெழுத்தாளர் நியமனம்; காலதாமதம் குறித்து கவலை

யாழ்ப்பாணம், நவ.20

மத்திய அரசாங்கத்தின்கீழ் உள்ள அரச அலுவலகங்களில் தமிழ்த்தட்டெழுத்தாளர்களை நியமிப்பதில் காட்டப்படும் காலதாமதம் குறித்து வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

யாழ் அரச அலுவலகங்களில் தமிழ் தட்டெழுத்தாளர்களை நியமனம் செய்வதற்காகப் போட்டிப் பரீட்சைகளில் உயர் புள்ளி பெற்றோருக்கு 2-08-97, அன்று கொழும்பிலும், 4-9-97, 1-10-97 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

கொழும்பில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய 40 பேருக்கும் உடனடியாக நியமனம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியோருக்கு இரண்டு மாதங்கள் கடந்தும் நியமனம் வழங்கப்படாமை அவர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக மேற்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். நகரில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியோர் யாவரும் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சையில் 76 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களாவர்.

இதே வேளை—

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் மேற்படி போட்டிப் பரீட்சையில் 73 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 17 பேர் கடந்த 17 ஆம் திகதி வேறொரு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதனால் ஏற்கனவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை நியமனம் பெறாதிருப்போர் கவலை கொண்டுள்ளனர்— என அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-ரீ)

# கோழிக் குஞ்சுகளுக்கு தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம் நவ, 20

ஒன்றரை மாத கோழிக் குஞ்சுகளுக்கு நீரில் கலந்து வழங்கப்படும் 'கம்போறா' வைரஸ் நோய்த் தடுப்பு மருந்து எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண கால்நடை வைத்தியசாலையில் வைத்து வழங்கப்படும்.

மருந்தைப் பெறுவதற்கு சிறிய நிறப் போத்தல்களை கொண்டு வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ – 5)

# விவசாயிகளுக்கு மண்வெட்டி

நெடுந்தீவு, நவ 20

உலக உணவு விவசாய நிறுவனத்தின் உதவியுடன் நெடுந்தீவில் உள்ள விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் உட்பட 75 பேருக்கு மண்வெட்டிகள் வழங்கப்பட்டன.

(ஐ-111)

# தீவுப் பகுதியில் இலவச கண் சிகிச்சை முகாம்

திருநெல்வேலி, நவ. 20

யாழ். லயன்ஸ் கழகம் வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 11 ஆம் திகதியன்று இலவச கண் பரிசோதனை முகாம் ஒன்றை நடத்தியது.

டாக்டர் எஸ் யோகராஜா தலைமையிலான கண் வைத்தியக் குழுவினர் இப் பரிசோதனையை மேற்கொண்டனர். யாழ் லயன்ஸ் கழகத் தலைவர் எஸ் என் கதிரவேலு மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்களும், லியோ கழக உறுப்பினர்களும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

வேலணை புங்குடுதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை ஆகிய தீவுப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கனோருக்கு கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கு மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. ஏனையோருக்கு பிறிதொரு தினத்தில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

# குருப் பட்டம்

தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராயத்தைச் சேர்ந்த இரு திருச்சபை ஊழியர்களுக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணியளவில் வட்டுக் கோட்டை பேராயத்தில் குரு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன

நெடுந்தீவுத் திருச்சபை ஊழியர் வண. ரீ. என். ஜெபநேசன், பண்டத்தரிப்பு திருச்சபை ஊழியர் வண. ரீ. ஈ. அசோக்குமார் ஆகியோரே குருப்பட்டம் தரித்து அபிஷேகிக்கப் படவுள்ளனர்.

(ஐ-ரீ)


குருபரன் கல்வி நிறுவனம்

புத்தூர்

SPOKEN ENGLISH WITH

Grammar

பிரிவு - i ஆரம்பமாகி நடைபெறுகின்றது

பிரிவு - ii ஆரம்பம்:

22 - 11 - 97

பி. ப. 4 மணி

ஆசிரியர்:-

திரு K. சிவனேசன்

(பிரபல வடமராட்சி ஆசிரியர்)

விபரங்கள் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(51280) நிர்வாகி



2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 04 — 1910



மறைவு: 13 — 11 — 1995

அமரர் ஆறுப்பிள்ளை சின்னத்துரை

(கொக்குவில் கிழக்கு கோயில் வீதி, இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: 20—11—1997

சிறப்பான பண்புகளே
சீர் கொண்டு வாழ வைக்குமென
உரைக்கின்ற உம் வாழ்வு
உணர்த்தி நிற்கும் எங்களுக்கு
கரைகின்ற மெழுகாக மனம்
கலங்குகின்றோம் நாமின்று!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சி. தவராசா,
கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(சி/2117)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## றொனியின் எச்சரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் நீடிக்குமாயின் இலங்கை விரைவில் உலகின் ஏழைநாடுகளில் ஒன்றாகிவிடும்.

இவ்வாறு எச்சரித்திருக்கிறார் முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி. மெல். இந்த எச்சரிக்கையை விடுத்திருப்பவர் இந்த நாட்டின் நிதி அமைச்சராகப் பதினொரு வருடங்கள் பணியாற்றியவர். இந்த நாட்டின் கணக்கு வழக்குகள் நன்றாகத் தெரிந்தவர் அவரின் எச்சரிக்கையை எழுந்தமானது என்றோ, மேலோட்டமானது என்றோ, அரசியல் லாபம்கருதியது என்றோ கருதி அசட்டை செய்ய முடியாது.

இலங்கை செல்வந்த நாடு அல்ல; அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒன்று அந்த நாடுகளின் பட்டியலிலும் மிகப் பின்னுக்கே உள்ளது. அபிவிருத்திப்பணிகளுக்கும் ஏனைய தேவைகளுக்கும் வெளிநாடுகளின் நிதி உதவி மற்றும் கடன் பணத்தையே எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய சபையின் தயவிலேயே இலங்கையின் நிதி வளம் தேய்வதும் வளர்வதும் தங்கியுள்ளது.

நாட்டின் வடக்கில் என்ன தெற்கில் என்ன, ஏழ்மையில் வாடும் மக்களின் வீதமே அதிகம். வறுமைக்கோட்டின் கீழ் இலட்சக் கணக்கான மக்கள் வாடுகிறார்கள். பல லட்சம் பேர் தொழில் எதுவும் இல்லாது வருவாய் இன்றி வாழ்க்கையைச் செலுத்த அல்லற்படுகிறார்கள்.

நாட்டின் தேசிய உற்பத்தி வீதம் நிமிர்ந்து நிற்கவில்லை. அதனால் விலைவாசிகள் உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பண வீக்கம் என்று மக்கள் பல சுமைகளைத் தாங்க முடியாமல் அல்லாடுகிறார்கள்.

இத்தகைய ஒரு நாட்டில், அதன் மொத்த வருமானத்தில் சுமார் மூப்பது சத வீதம் வடக்கு — கிழக்குப் போரை நடத்துவதற்காக — தொடர்வதற்காக — ஒதுக்கப்படுகிறது. நாட்டின் மொத்தச் செலவினத்தில்போருக்கு20சதவீதத்துக்கு மேல் விரயமாகிறது!

இந்தக் கணக்குகள் அரசாங்கக் கதிரைகளில் அமர்ந்திருப்போருக்குத் தெரியாதவை அல்ல. ஆனால் அவர்கள், கண்களை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு விட்டதாக நினைக்கும் பூனையைப் போன்று அரசியலை ஓட்டுகின்றார்கள்.

இதில் குறிப்பிடக் கூடிய விடயம் என்னவெனில் விடுதலைப் புலிகளை அடியோடு ஒழித்துவிட முடியாது என்பதனை அரச தரப்பினர் பகிரங்கமாக ஒப்புக்கொள்கின்றார்கள்; ஏற்றுக் கொள்கிறார்கள்.

அது போலவே விடுதலைப் புலிகளைப் புறக்கணித்துவிட்டு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது பயனற்றது என்பதனையும் அடிக்கடி கூறிக் கொள்கிறார்கள்.

அடுத்த முனையில்—

விடுதலைப் புலிகளுடனான போர்முக்கிய கட்டத்தை அடைந்திருப்பதாகவும், வவுனியா— யாழ்ப்பாணம் வீதி போக்குவரத்துக்கு திறக்கப்பட்டால் இராணுவச் செலவு கணிசமான அளவுகுறைந்து விடும்- என்றும் அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர்கருத்துவெளியிட்டிருக்கிறார்.

தமிழர் பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு காணப்போவதாகக் கூறிக் கொண்டு பதவிக்கு வந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், போரை நிறுத்துவதில் அக்கறை காட்டாமல் அதனைத் தொடர்வதே நோக்கமாகச் செயற்படுவது—

மூன்று ஆண்டுகள் கடந்த பின்னரும் சின்னப் பிள்ளைத்தனமாக நடந்து கொள்வது— நாட்டை ஏழ்மையாக மட்டும் மாற்றாது; குட்டிச்சுவராக்கியும் விடும்!

---

### கிழக்குப் பல்கலைக்கழகத்தில்

# ராகிங்குக்கு எதிரான நடவடிக்கை; ஆட்சேபித்து மாணவர் பகிஷ்கரிப்பு!

மட்டக்களப்பு, நவ. 20

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் நேற்று முதல் விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூலைத்தீவு மாணவன் எஸ் விஜயநாதன் ''ராகிங்'' நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவந்த ஒழுங்காற்றுக் குழு மேற்கொண்ட தீர்மானத்தை ரத்துச் செய்யக் கோரியே இந்தப் போராட்டத்தை மாணவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக 4 சிரேஷ்ட மாணவர்களின் விடுதி அனுமதியை ரத்துச் செய்யவும்—

அவர்களுக்கான மகாபொல உதவியை ஒரு வருடத்துக்கு நிறுத்தி வைக்கவும்—

ஒழுங்காற்றுக் குழு சிபார்சு செய்திருந்தது.

இதை ஆட்சேபித்தே பகிஷ்கரிப்புப் போராட்டம் நடைபெறுவதாக மாணவர் அமைப்புப் பிரமுகர் ஒருவர் 'உதயனுக்கு' தெரிவித்தார்.

அதேவேளை — இந்தப்பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இன்று நண்பகல் 12 மணிமுதல் ஒரு மணி நேரம் வீதி மறிப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

பல்கலைக்கழகத்தின் விவசாய பீடாதிபதியை நியமிக்கும் தேர்தலில் முறைகேடு இடம் பெற்றுள்ளதால், மீண்டும் அத்தேர்தலை நடத்துமாறு கோரியே இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

சாதகமான பதில் கிடைக்காது விட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-21-3)

## ஏழு படையினர் விபத்தில் காயம்

தென்மராட்சி, நவ 20

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் வேகமாக வந்த ஜீப் ஒன்று தடம்புரண்டதில் அதில் வந்த ஏழு படையினர் படுகாயமடைந்தனர். ஜீப்பும் பலத்த சேதமடைந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை எழுதுமட்டுவாள் சங்கரப்பிள்ளை ஏற்றத்தடியில் இச்சம்பவம் இடம்பெற்றது. (உ-117)

## தாச்சிப்போட்டி

குருநகர், நவ. 20

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான தாச்சிப் போட்டிகள் இன்றும் நாளையும் யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (உ-51)

# கடலில் கைதான 24 பேர் நீதிமன்றத்தில் ஆஜர்

யாழ்ப்பாணம், நவ. 20

விஸ்வமடுவிலிருந்து வந்து கொண்டிருந்த போது கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 24 பேர் யாழ். பொலீஸாரால் நேற்று யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை புங்குடுதீவுக்கு அருகாமையில் வந்து கொண்டிருந்த சமயம் காரைநகர் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பின்னர்ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் 1990 ஆம் ஆண்டு அச்சுவேலி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வன்னியில் வாழ்ந்தவர்கள் என்றும் —

தற்போது வன்னியிலிருந்து மக்கள் யாழ்ப்பாணம் வருவதைக் கேள்வியுற்று தமது சொந்த இடங்களுக்கு வருவதற்காக படகுகள் மூலம் வந்ததாகவும் —

நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இவர்களை ஆயிரம் ரூபா சொந்தப் பிணையில் செல்வதற்கு யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் ஏ.ஈ. ஏகநாதன் அனுமதித்தார். (உ-5)

# இரண்டு தலைகளுடன் அதிசய மலைப் பாம்பு

### திஸமஹாராமவில் கண்டுபிடிப்பு!

கொழும்பு, நவ. 20

இரண்டு தலைகளையுடைய மலைப்பாம்புக்குட்டி திஸமஹாராம பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

26 சென்ரி மீற்றர் நீளமுடைய இப்பாம்பு நான்கு கண்கள், இரு நாக்குகள், இரு மூளைகள், இரு மூக்குகள் என்பன காணப்படுகின்றன.

பிறந்து 3 மாதங்களான இப்பாம்பு உயிர் பிழைக்கும் என்றும், சுமார் 10 அடி நீளத்துக்கு வளரக் கூடும் என்றும் விலங்கியல் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

திஸமஹாராம பகுதிக்கு கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் சுற்றுலா சென்ற பாடசாலைச் சிறுவர்கள் சிலரே இப்பாம்பை அங்கு கண்டுபிடித்தனர்.

இப் பாம்புக் குட்டியின் தன்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த நிபுணர்கள் அதனை கொழும்புக்குக் கொண்டு செல்ல வசதியாக கண்ணாடிப் பெட்டி ஒன்றுள் இட்டுப்,பாதுகாப்பாக பொலீஸ் நிலையம் ஒன்றில் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தினர்.

நீண்ட பயணமாக கொழும்புக்கு எடுத்து வரப்பட்டதன் காரணமாக அப் பாம்புக்குட்டி அதிர்ச்சி அடைந்து காணப்பட்டது. பின்னர் அது முட்டைகளையும், தவளைகளையும் உண்டதாக வன விலங்குத்துறை துணை இயக்குநர் நந்தன அத்தப்பத்து தெரிவித்தார்.

இப்பாம்பு தனது இரு வாய்களையும் உணவு உண்ணப் பயன்படுத்துகிறது. பாதுகாப்புக்கருதி அதை சுதந்திரமாக உலவ விடாமல் கூட்டில் வைத்திருக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

விரைவில் இந்த அதிசய மலைப்பாம்பு பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## நாவலர் குருபூசை

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில், நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆறுமுகநாவலர் பெருமான்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, குருபூசை நிகழ்வுகள் நடைபெற விருக்கின்றன.

திருமுறைப்பாராயணம், நாவலர் பிள்ளைத் தமிழ் ஓதல், சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும். (உ-3)

## அரச செலவில் சடலம் அடக்கம்

நெல்லியடி, நவ. 20

பொலிகண்டிப் பகுதி இராணுவத்தினரால், கடந்த திங்களன்று மந்திகையில் ஒப்படைக்கப்பட்ட இரு சடலங்களும் மறு நாள் மாலை பிரேத பரிசோதனையின் பின் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

யாழ். நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனை நடத்தினார். இரத்தப் பெருக்கும், மூளைச் சிதறலுமே மரணத்துக்குக் காரணமென அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சாயி சிந்தனை

ஆன்மீக வாழ்க்கைக்குரிய முதல் அடையாளம் வைராக்கியம் என்கின்ற பற்றின்மையாகும். ஆத்மீக அறிவுத் துறையில் வைராக்கியம் இல்லாமையைப் பாமரம் என்பார்கள். வைராக்கியமே ஆன்மீகப் பயிற்சியின் அரிச்சுவடி. புலன்களின் கட்டுக்களை அறுத்தெறியும் பலம் வைராக்கியத்தினால் ஏற்படவேண்டும்.

சொற்ப நேரம் சிந்தனை செய்தால் லௌகீகமான செல்வம், புகழ், மகிழ்ச்சி ஆகியவற்றின் உள்ளீடற்ற தன்மையை உணரலாம். நீ வளம் பெற்றிருக்கும் போது ஒவ்வொருத்தனும் உன்னைப் புகழுவான். குளம் நீர் நிறைந்திருக்கையில் நூற்றுக்கணக்கான தவளைகள் நாலு பக்கங்களிலுமிருந்து கத்துகின்றன. குளத்தில் நீர் வற்றி வரண்டுபோனால் சத்தம் இடுவதற்கு ஒரு தவளை கூட அங்கிருக்காது.

ஒரு பழமொழி உண்டு: பிணத்தின் மீது கொஞ்சம் நகை இருந்தால் பலர் இறந்தவரைச் சொந்தம் கொண்டாடுவர். பெறுமதியானது ஏதும் இல்லாவிட்டால் அழுவதற்குக் கூட ஓர் ஆள் கிடைக்காது — என்பதே அதுவாகும்.

வங்கிக்கணக்கில் மேலும் மேலும் போட்டுக் கொண்டிருந்தால், அதனால் உங்களுக்கும், பிள்ளைகளுக்கும் பின்னுக்குத் தலையிடியை வாங்குகிறீர்களா இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சுத்தமான நிறைவான, கௌரவமான அவர்கள் வாழ்க்கைக்குக் கஷ்டத்தை நீங்கள் உண்டு பண்ணுகின்றீர்கள்.

தவறான வழிகளில் அற்பமான புகழுக்காகப் பாடுபடுபவர் ஒன்றை நினைத்துப் பார்க்கட்டும். உங்கள் நாட்டிலுள்ள கோடிக் கணக்கானோரில் இன்று மதிக்கப்படுபவர்கள் யார்? எதற்காக மதிக்கப்படுகிறார்கள்? லௌகீக ஆசைகளை விட்டு, தியாகஞ் செய்து, துறவு பூண்டு இறையனுபவம் பெறும் மிகக் கடுமையான பாதையை நாடியவர்களையல்லவா இன்று எங்கும் போற்றுகின்றார்கள்!

ஆதாரம்: Sathya Sai Speaks - Vol: III

# நான்கு சிறுவர்கள் மீது திருட்டுக் குற்றச்சாட்டு

### அறிவுரை கூறி நீதிபதி விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

பதினான்காயிரம் ரூபா பணத்தைத் திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நால்வர் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களாகக் காணப்பட்டதால் நீதிபதி அந்த நான்கு சிறுவர்களுக்கும் அறிவுரை கூறி விடுவித்தார்.

பாஷையூரைச் சேர்ந்த அருளப்பு சுதன், அருளப்பு நிமால், அருளப்பு ஜேசீசியஸ், எஸ். ஜெயந்திரன் ஆகியோரே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு யாழ் நீதிமன்றத்தில் திங்களன்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் பொன். பூலோகசிங்கம், கே. ராதாகிருஷ்ணன் ஆகியோர் 12 வயதிற்குட்பட்டோர் தண்டிக்கப்படக் கூடாது என்ற சட்டக்கோவையைச் சுட்டிக் காட்டி சந்தேக நபர்களை விடுதலை செய்ய வேண்டும் என வாதாடினார்கள்.

அதனையடுத்து நீதிவான் ஏ.என். இராமச்சந்திரன் சந்தேக நபர்களை அறிவுரை கூறி விடுதலை செய்தார். (உ-9)

## நாளை

கார்த்திகை 6

வெள்ளிக்கிழமை

திதி: ஸப்தமி முன்னிரவு 7.14 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம் முன்னிரவு 8.47 வரை.

சுபநேரம்: 6.10 7.40

[illegible] 10.50-12.10

[illegible] நேரப்படி)

## விவசாயிகள் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் 1997 நவம்பர் மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு இன்று வியாழக்கிழமை கமத்தொழில் காப்புறுதிச் சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது.

## பரிசளிப்பு விழா

நவாலி, நவ. 20

ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.00 மணி முதல் அதிபர் சி. நாகையா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் கலந்து கொள்வார். (உ-100)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யூரியா விநியோகம்

தென்மராட்சி, நவ. 20

தென்மராட்சிப் பிரதேச நெற் செய்கையாளர்களுக்கு நேற்று முதல் கைதடி, சாவகச்சேரி ஆகிய கமநல சேவை நிலையங்களில் வைத்து யூரியா உரம் வழங்கப்படுகிறது.

ஒரு பரப்புக்கு ஒரு கிலோ என்ற விகிதத்தில் நெற் செய்கையாளர்களுக்கு கிலோ 17 ரூபா வீதம் யூரியா வழங்கப் படுகிறது.

இதேவேளை பாதுகாப்பு அரணிக்கு வெளியே உள்ள நெற்செய்கை வயல்களுக்கு யூரியா வழங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்தனர். (உ-117)

# பாகிஸ்தான் பிரதமருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு

### அங்கு பெரும் அரசியல் நெருக்கடி உருவாகுகிறது

இஸ்லாமாபாத், நவ.20

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடுப்பதற்கு அந்நாட்டின் உயர் நீதிமன்றம் அனுமதி அளித்திருப்பதை அடுத்து அங்கு பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

நவாஸ் ஷெரீப்பின் அரசினால் கொண்டு வரப்படும் அரசமைப்புச் சீர்திருத்தங்களை இடைநிறுத்தி வைக்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்து

உயர்நீதிமன்றம் குறித்தும் பிரதம நீதியரசர் குறித்தும் நவாஸ் ஷெரீப்பும் அவரின் சகாக்களும் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்துக்களே இப்போது நீதிமன்ற அவமதிப்புக் குற்றச் சாட்டு எழுவதற்குக் காரணமாகி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்ந்த உயர் நீதிமன்றம் பிரதமர் நவாஸ் ஷெரீப், அவரின் சட்ட அமைச்சர், ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மூன்று பத்திரிகையாளர்கள்மீது நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு சுமத்துவதற்கு போதிய ஆதாரம் இருப்பதாக நேற்று அறிவித்தது.

நேற்றும், நேற்று முன்தினமும் நீதிமன்ற விசாரணைகளுக்குச் சமுகமளித்திருந்த பிரதமர் நவாஸ் ஷெரீப், அவருக்கு எதிராகக் குற்றம் சுமத்துவதற்கு போதிய ஆதாரங்கள் இருப்பதாக உயர்நீதிமன்றம் நேற்று பூர்வாங்க விசாரணைத் தீர்ப்பு வழங்கப்பட்டதும் —

நேரடியாக நீதிமன்றத்தில் வைத்து தமக்கு குற்றப்பத்திரம் கையளிப்பதைத் தவிர்ப்பதற்காக அவசர அவசரமாக நீதிமன்றத்திலிருந்து வெளியேறினார்.

இந்த வழக்கில் நவாஸ் ஷெரீப் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர் ஆறு மாத சிறைத்தண்டனைக்கு ஆளாவார்; அத்துடன் பிரதமர் பதவி உட்பட அரசுப் பொறுப்பு வகிக்கும் தகைமையையும் இழப்பார்.

நீதிமன்றத்தின் நேற்றைய தீர்ப்பை அடுத்து —

உயர் நீதிமன்றத்தினதும், பிரதம நீதியரசரினதும் அதிகாரங்களைக் கணிசமாகக் குறைக்கும் அரசமைப்புத் திருத்தத்தை உடன் கொண்டுவருவதற்கான அவசர ஆலோசனைக் கூட்டங்களை பிரதமர் நவாஸ் ஷெரீப் நடத்தத் தொடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது (உ-3-9)

## சமய சந்நிதியில்

சாவகச்சேரி கச்சாய் வீதி நாவலடிப் பிள்ளையார் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி திவ்விய ஜீவன சங்கத்தினரின் பஜனைப் பாடல்களும் தென்மராட்சிப் பிரிவு இளைஞர் சேவைகள் அலுவலர் கு. பரராசசேகரத்தின் சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (உ-117)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு அருள் மிகு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர் அ. ஜெகதீஸ்வரதேசிகர் ''சுவாமியே சரணம்'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்

தொண்டமனாறு மகா வித்தியாலய ஆசிரியர் இரா. ஸ்ரீ நடராசா அறிமுக வுரையை நிகழ்த்துவார். (ஐ-30)

# புளொட்- ரெலோ முறுகல் சமரசமாகத் தீர்ந்தது!

வவுனியா மகாரம்பைக்குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புளொட் — ரெலோ அமைப்புக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து இரு அமைப்புப் பிரதிநிதிகளும் பேச்சுநடத்தி சுமுகமான நிலையைத் தோற்றுவித்தனர்.

புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா விடுத்துள்ள அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த பின்னணி, சம்பவ விவரம் ஆகியவை அந்த அறிக்கையில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இரு அமைப்புகளின் உயர் பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தை சுமார் 3 மணி நேரம் நடைபெற்றது. புளொட் சார்பில் உப. தலைவா என். மாணிக்கதாசன், வன்னி எம். பியான எஸ். சண்முகநாதன், வவுனியா நகர சபைத் தலைவர் ஜி. ரி. லிங்கநாதன் ஆகியோரும் — ரெலோ சார்பில் சிவாஜிலிங்கம், வினோத், குகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பேச்சின்போது இருதரப்புத் தவறுகளும் புரிந்துணர்வுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஐக்கியத்துடன் செயல்பட வேண்டிய அவசியமான காலகட்டமென்பதால் மென்மேலும் பிரச்சினைகள் எழாமல் கவனித்துக் கொள்வதெனவும் —

இருமாதத்துக்கொருமுறை இவ்வாறான சந்திப்புக்களை நடத்துவதெனவும் —

இணக்கம் காணப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-3)

## மட்டக்களப்பில் மோதல்சம்பவம்

கொழும்பு, நவ. 20

மட்டக்களப்பு மாவட்டம் ஈச்சிலம்பத்தைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது. (உ-9)

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்)

வெடிக்கும் இரு குண்டுகளும், திருநெல்வேலிக்குக் கிழக்கேயுள்ள இடம் ஒன்றில் ரி-56 துப்பாக்கி, இரண்டு மகஸின்கள் ஆகியவையும் மீட்கப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-100)

## பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களிப்பு

கொழும்பு, நவ. 20

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்ற போது ஆதரவாக 126 வாக்குகளும் எதிராக 85 வாக்குகளும் கிடைத்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி., புளொட், இ. தொ. கா. ஆகியன அரசுத் தரப்போடு சேர்ந்து வாக்களித்தன.

ஐ தே கட்சி உறுப்பினர்களுடன் ஜே. வி. பி. உறுப்பினர் சேர்ந்து எதிர்த்து வாக்களித்தார்.

வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் இன்று ஆரம்பமாகின்றது.

இறுதிக்கட்ட நடவடிக்கைகள் டிசம்பர் 16 ஆம் திகதி இடம் பெறும். (உ)

# கிருஷாந்தி வழக்கில் அதிபர் சாட்சியம்

கொழும்பு, நவ. 20

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி கற்பழிப்பு மற்றும் கொலை வழக்கு விசாரணை நேற்று நடைபெற்ற போது, அவர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி என்பதை சாட்சி ஒருவர் உறுதி செய்தார்.

நேற்றைய விசாரணையின் போது சாட்சியமளித்த யாழ். சாவ்ஸ் வித்தியாலய அதிபர் பஞ்சநாயகி சின்னத்துரை என்பவரே இதை உறுதி செய்தார்.

அவர் தமதுசாட்சியத்தில் —

''96 ஆம் ஆண்டு நடந்த ஜி சீ. ஈ. (உயர் தர) பரீட்சையில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பரீட்சை நிலையத்தில் மேற்பார்வையாளராகப் பணியாற்றினேன். இரசாயனப் பாட முதலாம் பகுதிக்கு அவர் சமுகமளித்தார். இரண்டாம் பகுதிக்கு அவர் சமுகமளிக்கவில்லை. பின்னர் அவர் இறந்ததாக அறிந்தேன்.'' — என்றார்.

யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரனும் நேற்று சாட்சியம் அளித்தார்.

விசாரணை இன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடரும். (உ-3)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்)

களின் சங்கம் ஒரு கோரிக்கையை முன்வைத்தது.

''ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள், இல்லையேல் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரியுங்கள்'' என்றே அவரிடம் கோரப்பட்டது.

இக்கோரிக்கையை ஏற்று நாம் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப் போகிறோம் — என்று குழுவினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

விரைவில் அவர்களைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார் என்றும் —

அதற்கான திகதியை விரைவில் அறிவிப்பதாக அவர் தெரிவித்தார் என்றும் — ஈ. பி. டி. பி. பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார். (உ-3)

## மூன்றாம்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லாப்புலிகளையும் ஒழித்துக் கட்டிவிடலாம் என எவராவது கூறினால் அவருக்குப் பைத்தியம் என்றே நான் கூறுவேன். இது என்றும் முடியாத காரியம் — என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க கூறியதாக அதே கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இன்னும் இரண்டு, மூன்று ஆண்டானாலும் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது' — என்று இராணுவத் தளபதி றொஹான் தளுவத்த 'ஜோன்ஸ் பாதுகாப்பு வாரமஞ்சரிக்கு' தெரிவித்துள்ளார்.

'நாட்டில் சமாதானம் ஏற்பட விடுதலைப் புலிகள் ஒத்துழைக்க வேண்டும்' — என்று யாழ்ப்பாண தளபதியாக பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல பொது மக்கள் மத்தியில் பேசுகையில் கூறியுள்ளார்.

வெல்ல முடியாத இந்தப் போரைத் தொடர்வதில் என்ன பயன்? எனவே இந்த யுத்தம் முடிவுக்கு வரவேண்டும். இந்தப் போர் முடிவுக்கு வருவதென்றால் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளவேண்டும்; மூன்றாம் தரப்புமத்தியஸ்தத்துடன் அரசும் - புலிகளும் பேச்சு நடத்த வேண்டும்.

இதைத்தான் எதிர்க்கட்சித் தலைவரும் பலமுறை கூறி வருகிறார். அதேபோன்று பிரதி நிதி அமைச்சரும் பலமுறை கூறிவருகிறார்.

இதே நிலைப்பாட்டைத்தான் இலங்கையின் நேச நாடுகள் பலவும் தெரிவித்துள்ளன. இந்த யதார்த்த — உண்மை — நிலையை சகலரும் புரிந்துகொள்ள முன்வர வேண்டும்.

இந்த யுத்தத்தை தொடர்வதன் மூலம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும் முடியாது; பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவும் முடியாது — என்றார். (உ-3)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்)

குவதற்கே முன்வந்திருப்பது போல் தெரிகின்றது.

இந்த வரவு செலவுத் திட்டத்தினால் முதலீட்டாளர்களுக்கே நன்மை கிடைத்திருக்கின்றது; ஏழை, நடுத்தர வர்க்கக் குடும்பங்களுக்கு நன்மை ஏதுமில்லை.

அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகளில் புலிகளைப் பங்கு பெறச் செய்வது குறித்து இப்போது அடிக்கடி பேசப்படுகின்றது. புலிகளுடன் பேசவேண்டியது குறித்து ஐ. தே. கட்சிதான் இப்போது அடிக்கடி பிரஸ்தாபிக்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் எப்போது பேசுவது என்பதை விட, எதைப் பேசுவது என்பதுதான் முக்கியமானது என்பதை ஐ.தே. கட்சி உணர வேண்டும்.

எனவே பெரும்பான்மைக் கட்சிகளான அரசுத் தரப்பும் ஐ.தே.க. வினரும் ஒன்று கூடி ஆராய்ந்து புலிகளுடன் என்ன பேசுவது என்பது குறித்து ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும். அப்படி வராவிட்டால் பிரயோசனம் இல்லை.

அப்படி உடன்பாட்டுக்கு வராமல் நடத்தப்படும் எந்தப் பேச்சும் கடந்த காலப் பேச்சுகள் போலத் தோல்வியிலேயே முடியும் — இவ்வாறு அவர் கூறினார். (உ)

## சினிமா...

(முதலாம் பக்கத் தொடர்)

தீவிரவாதியுமான பட்டாலா ரவி ஆகிய இருவரும் படுகாயமடைந்தவர்களில் அடங்குவர்.

பட்டாலா ரவி தயாரிக்கும் சினிமாப் படம் ஒன்றின் ஆரம்ப விழாவில் பங்கு பற்றிய பின்னர் பிரமுகர்கள் வெளியேறிக் கொண்டிருந்த சமயமே வாசலில் இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

கார் ஒன்றில் இருந்த குண்டே பெரும் சத்தத்துடன் வெடித்தது. இச்சத்தம் ஐந்து மைல் தூரம் வரை கேட்டது. பக்கத்தில் மற்றொரு வாகனத்தில் அமர்ந்திருந்த — ஏழு பேரைக் கொண்ட — தொலைக்காட்சிக் குழுவினர் கூண்டோடு அழிந்தனர். (உ-9)

## ஜெயின் கமிஷனின்...

(முதலாம் பக்கத் தொடர்)

அரசு ஆதரவு வழங்கியதாகத் தெரிவித்து இந்த இடைக்கால அறிக்கையில் ஆணையாளர் ஜெயின் தி. மு. க. மீது கடும் குற்றச் சாட்டுக்களை சுமத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ராஜீவ் கொலைச் சம்பவத்தில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் தி. மு. கவை தனது அரசிலிருந்து ஐக்கிய முன்னணி வெளியேற்ற வேண்டும் என்றும் —

அல்லது ஐக்கிய முன்னணி அரசுக்கு வெளியில் இருந்து வழங்கி வரும் ஆதரவை வாபஸ் பெற்று விடப் போவதாகவும் —

ஐக்கிய முன்னணி அரசுக்கு தெரிவிக்க காங்கிரஸ் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

அத்தகைய கோரிக்கை வந்தாலும் தி. மு. கவை அரசில் இருந்து வெளியேற்றுவதில்லை என்று ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சரவை நேற்று ஆறு மணித்தியாலம் கூடி ஆராய்ந்தபின்னர் முடிவு செய்தது.

[illegible] காங்கிரஸ் ஐ. மு. அரசு இணங்காவிடில் அதற்கு வழங்கி வரும் ஆதரவை காங்கிரஸ் விலக்கும்; ஐ. முன்னணி அரசு கவிழும். — என்று அவதானிகள் கூறுகின்றனர்.

இதற்கிடையில் —

தி. மு. கவுக்கு ஆதரவாகப் பாரதீய ஜனதாக் கட்சிப் பிரமுகர்களும் அதன் தலைவர் அத்வானியும் கடந்த சில தினங்களாகப் பேசிவருகின்றனர்.

'முன்னாள் பிரதமர்களான இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி போன்றோரே முன்னர் புலிகளுக்குஆதரவு வழங்கி வந்திருக்கின்றார்கள். இந்நிலையில் தி. மு. கவை மட்டும் குற்றம் சுமத்துவதுதவறானது' என்று அத்வானி கூறுகின்றார்.

தி மு. கவுக்கு ஆதரவாக பாரதீய ஜனதாக் கட்சி பேசுவது —

ஐக்கிய முன்னணி அரசு ஜெயின் கமிஷன் நெருக்கடியால் கவிழ்ந்தாலும், மத்தியில் புதிய அரசை அமைக்கக் கூடியதாக புதியகூட்டணிகள் ஏற்பட வாய்ப்புக்கள் இருப்பதையே காட்டுகின்றது என்கின்றனர் அவதானிகள். (உ-3-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-11-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org